ஸ்ரீ கப்பு நிதானம்

அறுபத்திலை

சிகப்புக்கு நிதானம்.

(தொடர்ச்சி)

247. தெரியவே செந்திருதான் உரைத்த மார்க்கம்
தேசமதில் கழுதை லொத்திகொண்டுவந்து
அரியவே வெண்ணீரில் நாளொன்றூறி
அதையிறுத்து தெளித்தெடுத்து மூன்று நாளும்
சரியாக அந்தி சந்தி ஆறு நேரம்
தாய் தனக்கு மிளகு மஞ்சள் தவிர்த்து தள்ளு
பொரியுமே சிகப்பு வகை எல்லாந்தானும்
போய்விடும் உண்மையிது சூக்ஷந்தானே.

சிகப்பு தீரைக்கு உள்ளிக் கஷாயம்.

248. தானென்ற முருங்கைப்பூ முளையிலுண்டான
தக்கதோர் புழத்தி மண்டை கருஞ்சூரைப்பட்டை
ஊனென்ற சிம்ம சுடர் மூலியொடு
உள்ளிரண்டும் உலுவாயும் இடிநேர் கூட்டி
மானென்ற பைங்கொடியாளீன்ற சேய்க்கு
பற்பமதாய் கஷாயமிட்டு எலந்தாக்கி
தேனென்ற பனைவெல்லாம் கலந்துங் கூட்டு
தேகமதில் காணாது சிகப்புதானே.

249. தானென்ற சிகப்பு வகை தீரைபோகும்
தயவான தேகமதில் தணப்பு தீரும்
தேனேதான் வாந்தியதும் தீரைக்குத்தும்
திரண்ட பிணி சிகப்பதிலே தீரை போகும்
ஊனேதான் தேங்கெண்ணெய் வைத்து மூழ்க
உற்றிலங்கும் தேகமது பிரகாசிக்கும்
வானேதான் உண்மையிது பிசகிடாது
வகையறிந்து கும்பமுனி அருளினாரே

வேறு கஷாயம்.

250. அருளினார் இன்னுமொரு கஷாயஞ் சொல்வேன்
அருளான சிகப்பொடு பிரளிநீர
திரளவே உள்ளி ரண்டும் முருங்கைப்பூவும்
நிலையான மதுரமொடு மாயம் சூரை
திரளவே கருஞ்சீரம் அரத்தை தானும்
திகழ்ந்ததோர் முசுட்டைத் தண்டும் கூட்டி
உருவான திரிப்பன்புல் விஷ்ணுக் கிராந்தி
உற்றபூவரசொடுவடலிமட்டை

251. மட்டையொடு நல்துளசி சமனாய் வாங்கி
மைந்தனே கஷாயமிட்டங்கருந்தும் போது
திட்டமுடன் ரோசனையும் உரைத்துக் கொள்ள
சிறுவருக்கு எழுந்த சிகப்பு அறுபத்தினாலும்
பட்டமுடன் பிரளிதொந்தம் தீரை தோஷம்
மறக்குமே பறக்குமப்பா பாலர்தன் கஷாயமிட்டு
துட்ட மற்றமானது போல் சூக்ஷம் சொன்னேன்
தொடர்ந்து வரும் நோய்களுக்கு கஷாயம் கேளே.

எல்லா சிகப்புக்கும் தெற்றி கஷாயம்.

252. கேளே நீ தெற்றியது சமூலம் வாங்கி
கெறுவான நல்துளசி ஆடாதோடை
ஆளே நீ பொன் நெரிஞ்சி அமிர்த வள்ளி
அறுகு ரண்டு பேய்புடோலம் வேப்பின் பட்டை
மீளே நீ ஈருள்ளி சிவனார் வேம்பு
மிக்கதொரு சீலாந்தி சூரைப்பட்டை
தாளே நீ கெருடனுட கொடியின் வேரும்
தாறு வேர் சாரணையின் வேருங்கூட்டே

253. கூட்டவே வடலி மட்டை திரிப்பன் புல்லு
குணமான செம்பருத்தி பூவுதானும்
வாட்டே நீ வறட்டு மஞ்சள் விஷ்ணுக் கிராந்தி
வகையான நற்சீரம் கரிய சீரம்
ஊட்டே நீ நல்மிளகு மாய்க்காயும்
உறுதியுள்ள கார்கோலு கொத்தமல்லி
தீட்டே நீ அதிமதுரம் சித்தரத்தை
திரிபலையின் கோடுடனே சுக்குமாமே.

254. ஆமென்ற ரெத்த சந்தம் பூகா விருக்ஷம்
அரும் பீத ரோணியுடன் சாத்திர பேதி
வேமே நீ வகையொன்று கழஞ்சொன்றாக
வெண்திரிசாதி வகை கழஞ்சு பாதி
போமே கேள் கஷாயமிட்டு எட்டொன்றாக்கி
புதிய பசு ரோசனையும் கூடதாக்கி
தாமே போம் சிகப்பு வகை அறுபத்தினாலும்
தக்கதொரு கரப்பன் வகை அன்பத்தைந்தே.

255. ஐந்துடனே அக்கரமும் சொறி சிரங்கு அரிய
மண்டை காரப்பனொடு விசர்ப்பம் தீரும்

தொந்தமென்ற சிகப்பில் வரும் பனியும் மாறும்
    தடராத வீக்கமறும் ஞுஷம் ஞுஷம்
கந்தமதும் தளப்பு பொன்னி கிரந்தி மாறும்
    கனமான கஷாயமிது போலுண்டோ
விந்தையுடன் சொல்லி விட்டேன் மேலுங் கேளு
    விபரமெல்லாம் வெளியாக விம்பு வேனே.

வேறு தெற்றிவேர் கஷாயம்.

256. விளம்புவேன் தெ'றிவேர் வேப்பின் பட்டை
    விரிந்த நல்ல துளசியுடன் அமிர்து வள்ளி
புளம்பு வேன் முள்நெரிஞ்சி பொன்நெரிஞ்சி
    புனித முறும் ஈரவுள்ளி கருவலாஞ்சி.
அளம்புகின்ற சிவன் வேம்பு ஆடாதோடை
    அரியதொரு பூவரசு ஞுரைப்பட்டை
களம்புகின்ற பேய்புடோலம் கருத்த சுண்டை
    கனமான கெருடஅட கொடியின் வேரே.

257. வேராகும் தாருவேர் அருகின் வேரு
    வெள்ளறுகு தாருவேர் திரிப்பன்புல்லு
சேராத கற்றாழைச்சருகு தானும்
    சொல்லிவிட்டேன் பனங்கத்திு நீர்நுள்ளி
சீராகும் குக்கிலுடன் சினப்பாவும்
    சித்தரத்தை திற்பிலியின் மூலந்தானும்
வாரான நாயுருவி விஷ்ணு கிராந்தி
    வருஞ்சுக்கு கருஞ்சீரகம் சிறிய சீரம்

258, சீரகமும் கார்கோல் கொத்தமல்லி
    திரிபலையின் தோடுடனே வறட்டு மஞ்சள்
பாரகமே நல்மிளகு மாயக்காயும்.
    பன்பாக வகை வகைக்கு கழஞ்சதாக
தாரகமே முச்சாதி வகை கழஞ்சு பாதி
    தானிதனைக் கஷாயமிட்டு அருந்தும்போது
ஆறான சொறி சிரங்கு வீக்கந்தீரும்
    அன்பத்தி ஐந்து வகை கரப்பன் போமே.

259. போகுமே சிகப்பு வகை அறுபன்னென்றும்
    பொல்லாத கிரந்தியுடன் பறங்கிப்புண்ணும்.
வேகுமே விஷ பாகம் தளப்பு பொன்னி

விசர்பாடன் பருவனத்தி சூடு மாறும்
பாகமே பறங்கி சுரம் அற்றந்தேன் மன்னுள்
பாதலகர்க்கு நேர்யறிந்து பதமாய்ச் செய்யில்
ஆகுமே பண்டிதருக்கறியச் சொன்னேன்
ஆகமத்தின் முறையறிவோர்க்களவுதானே.

64 சிகப்புக்கும் தெற்றி வேர் கஷாயம்.

260. அளவில்லா சிகப்பு வகை அடக்கம் போக
அறைகிறேன் தெற்றியது கசமூலந்தானும்
களவில்லா தெற்றி மலர் நன்றி சூரை
கனமான செம்பருத்தி பூவுதானும்
பழகியதோர் அதிமதுரக்கம்பிளேடு
பண்பான நற்துளசி ஈரவுள்ளி
நளவில்லா நத்தையென்ற சூரிவேரும்
நலமாகச் சொல்லுகிறேன் முத்தக்காசே.

261. காசாகும் பீதிளையுடவேந்தானும்
கனமான மாதளையின் பிஞ்சும் பூவும்
வாசமென்ற செம்பொன்னின் நெரிஞ்சி யோடு
வல்லாரை அறுகது தான் ரண்டுங்கூட
தாசமென்ற வெண்குன்றி நாகவல்லி
தகமையென்ற சொல்லு தலையூரிவேரே.

262. வேரு வகை சொல்லி விட்டேன் விபரமாக
விளம்புகிறேன் இனிய பூவரசின் பட்டை
பாரிலுள்ள இசங்குடனே ஆடாதோடை
பகர்ந்துடனே விளங்குகின்ற இண்டுங் கூட்டி
நேராகத் தூதளையும் சிறிய சீரம்
நெருங்குகின்ற கார்கோல் அரத்தைதானும்
கரியதோர் மிளகுடன் கொத்தமல்லி
கறுத்தொரு சீரகமும் கடுக்காய் தோடே

263. தோடுடனே சொல்லுகிறேன் சாதி மூன்று
சொல்லுகிறேன் கருகு ரோகணி நிலத்து வாகை
வாடியே உலர்ந்ததொரு ரெத்த சந்தம்/வன்மையாய்
வளர்ந்ததொரு புதா விருக்ஷம்
கூடியதோர் சாஸ்திரத்தின் பேதி தானும்

குணமாகவே விளங்கும் மாயக்காயும்
நாடியே வகையொன்று சமனதாக
நாட்டுகிறேன் நன்டறு படியும் நீரே.

264. நீருதனை விட்டுடனே எட்டொன்றுக்கி
நிறையிரண்டு தடமாக யிறுத்துக் கொண்டு
பாருள்ளே ரோசனையும் கூடதாக்கி
பாகமாய் பாலகர்க்கு அருந்தும்போது
கோரமாம் சிகப்பு வகை எல்லாந் தீரும்
கொடியதொரு நீர்க்கட்டு சூலை தீரும்
ஓரமாம் பொக்கலுடன் ஊரல் தீரும்
உணக்கலுடன் காந்தல் தோல் உரிவும் போச்சே.

265. போச்சப்பா சொறிகளுடன் சிரங்குதீரும்
பொல்லாத தளப்ப வகை எல்லாந் தீரும்
ஆச்சப்பா வாய்ப்பூப்பு நாக்குப் புண்ணு
அடங்காத வாய்க்கிரந்தி அற்றுப்போகும்
நீச்சப்பா தொண்ணைப்புண் வாய் நீரூறல்
நில்லாத தலைக் கரப்பன் நாவறட்சை
வேச்சப்பா பிணிகளெல்லாம் அகன்று போகும்
வேதநூல் விதியறிந்து விரித்துக் கூறே.

க
நிர்பாதி கிஉஷாயம்.

266. கூறுவேன் வேப்பிலை பட்டைதானும்
குணமான அமிர்துவள்ளி ஆடாதோடை
அறவே துதேளையும் கறுத்த சுண்டை
அப்பனே கருஞ்சூரை கருவிலாஞ்சி
வீறுள்ள பேய்ப்புடோலம் சிவனார் வேம்பு
விளம்புகிறேன் முள் நெரிஞ்சி அழகுரண்டு
தேறவே பிரம்பிலை கிழங்கு தானும்
திறமான கொட்டமுடன் மதுரமாமே.

267. மதுரமுடன் மல்லி வில்லை அமுக்குறந்தான்
மதி சீனப்பாவுடன் கார் கோலு
இதரமுள்ள வேர்க்கொம்பு சித்தாமுட்டி
இசங்கு திரிபலை கெருடக் கொடி நேராக
குதிரமுடன் கஉஷாயமிட்டு குடி நீருட்ட
கொடுஞ்சிகப்பு எட்டெட்டு கண்டமாலை

அதிருமடா கரப்பனுடன் சொறி சிரங்கு
    அடங்காத செவ்வாற்ப்பு அரையாப்புமே.

268. ஆப்பென்ற புற்றுடனே ஊரல் கொக்கல்
    அடர் சூலை விஷ பாகம் படுவன் பொன்னி
வேப்பென்ற விசர்ப்பமுடனீர்க்கெட்டு
    விள்ளுகிறேன் பஞ்சவீரப்பொடிதாக்க
கோப்பென்ற அரிகிரந்தி பரிகிரந்தி
    கொடியதொரு பறங்கியுடன் கிரந்தி மாறும்
பாப்பென்ற பிணிக்கெல்லாம் பறந்து போகும்
    பாடுகிறேன் பால வாதக்கட்டும் போமே.
        ரெிய நின்பாதி சகாயம்.

269. போமப்பா உலகத்தில் மதலைக்கெல்லாம்
    பொங்கி வந்த சிகப்பதிலே படுவன் பொன்னி
வேமப்பா தீர்வதற்கு வேப்பின் பட்டை
    வெற்றியுள்ள அமிர்து பூவரசின் தோலும்
ஆமப்பா சூரை வேர் கருவிலாஞ்சி
    ஆடாதோடை வேருடனே பறங்கிப்பட்டை
தூமப்பா கொடி மூலம் கறுத்த சுண்டை
    தூக்கு கருஞ்சீரகமும் நெரிஞ்சி கூட்டே.

270. கூட்டடா நல் மிளகு திரிபலைத்தோல்
    கொடிய தெற்றி சமூலமுடன் மதூரம் குக்கில்
நாட்டடா அசுவ கெந்தம் மல்லி தேற்றான்
    நல்ல கொட்டம் புடோல முடன் வறட்டு மஞ்சள்
பாட்டடா சொன்னபடி இருபத்திரெண்டும்
    பக்குவமாய் தான் வகைக்கு சரியாய் வாங்கி
போட்டடா உரல்தனிலே சதைப்பாண்டம்
    புதுமை பெற அப்புவிட்டு எட்டொன்றுக்கே

271. ஆக்கிடவே பதமாக அறிந்து கொண்டு
    அப்பனே சீரகத்தூள் தூவிக் கொள்ள
நீக்கிடுமே சிகப்பு தொகை அறுபத்திரெண்டும்
    நில்லாது படுவனுடன் பிளவை சூலை
போக்கிடுமே அரையாப்பு பறங்கிப்புண்ணு
    புதல்வர் பனிவிட்டு விடும் குட்டமெல்லாம்
வாங்கிவிடும் பவுந்திரங்கள் ஊசிரோகம்

வராது விசற்பமதும் கண்டமாலை.

272. கண்டமதில் மாலையொடு கர்ளிக்குமம்
காதை லிங்கப்புற்று கிரந்திப்புற்று
விஷதேச விட்டுமே சிறந்திசெட்டும் செவ்வாற் பென்றும்
தொண்டை விட்டுமே சிறந்
விட்டதொரு கரப்பன் வகை அன்பத்தி ஐந்தும்
விட்டிடுமே கிரந்தியெட்டும் செவ்வாற் பென்றும்
தொண்டலெடு சூலையுடன் காதிரல்
கடர்ச்சி விடும் சீழ்பாச்சல் பாவு பன்னவம்
அண்டருமே நின்பாதிக் கஷாயந்தன்னை
அறிந்துரைத்தார் வெகு நோய்கள் கன்றுபோமே.

தெற்றிப்பூ கஷாயம்.

273, போகுமே தெற்றி மலர் பிச்சிமொட்டு
போர்த்தவோயின் மலருடனே முதலிப்பூவும்
ஆகமே தாமரையின் மலரிஞேடு
ஆனதொரு தோடை மலர் செம்பருத்தி
வேகமுடன் கொத்தமல்லி சிறு சீர் சந்தம்
வெற்றியுள்ள ஞரை வேர் கார்கோல் ஏலம்
காகமென்ற சீரகமும் மதுரம் பூலா
கடியதோர் பேதியொடு சிவந்திருள்ளி

274. உள்ளியொடு ரோகணி முந்திரியுங் கூட்டு
உண்மையுடன் கஷாயமிட்டு ரோசனையுந் தாக்கி
தள்ளிடவே பாலகர்க்கங்காமு நேரம்
சாந்தமாம் சிகப்பு தொகை அறுபத்திலும்
எள்ளளவும் பிசகாது சன்னிவேர்வை
எடுத்தமலக்கட்டுடனே சிறு நீர்போகும்
தெள்ளமிர்தே தெற்றி மலர் கஷாயமிந்த
தேசத்தில் தமிழ் முனிவர் பாடினரே.

சிறிய சந்தனாதி கஷாயம்.

275. பாடினர் சந்தனாதிக் கஷாயமொன்று
பருத்த சந்தம் ரண்டு நன்றிகரிய ஞரை
தேடினர் முந்திரிகை மதுரம் முத்தம்
திறமான புலாவும் சா்ஸ்திரபேதி

கூடினூர் குமத்திப் பச்சை ஆரை கூட்டி
நுறுக்கியே கஷாயமிட்டு அருந்தும் போது
வாடினூர் இல்லையடா பாலகர்க்கு
வந்ததொரு சிகப்பு வகை வழுவிப்போமே.

276. வழுவிப் போம் மூன்று நாள் ஆறுநேரம்
வார்த்தருந்த எட்டெட்டு சிகப்பு பொக்கல்
தழுவியதோர் தப்புடனே ஊரல் மாறும்
தாழ்வில்லா வாயில் புண்ணு சிரங்குந் தீரும்
அழுகியதோர் கிரந்தியுடல் சுரமுந்தீரும்
அக்கரங்கள் ஆனதுவும் அகன்று போகும்
பழுதில்லா மலை முனிவர் பகர்ந்ததிந்த
பாங்கான நூலனுவும் பிசகிடாதே.

வாத சிகப்புக்கு கஷாயம்.

277. பிசகாமல் அரிதகியும் சிவதை வாகை
பிலமான பூவரசு கொடி நன்னரி
அசையாத் கருஞ்சூரை சித்தா முட்டி
அப்பனே மிளகு கருஞ்சூரை கூட்டி
நசையாமல் கற்சீரம் கொத்தமல்லி
நன்றாகக் கூட்டியெல்லாம் சதைத்துப் போட்டு
பசயாமல் கஷாயமிட்டு குளிகைதாக்கி
பாலகர்க்கு ஊட்டிடவே. சிகப்பு போமே.

278. போகுமே வாதமதில் சிகப்பதெல்லாம்
புதல்வருட காயமதில் பொன்னிதீரும்
ஏகுமே சூலை முதல் நீர்கள் தீரும
என்ன சொல்வேன் கஷாயமதின் வீரந்தானும்
தூங்குமே சிகப்பதெல்லாம் சிதறிப் போகும்
சூக்ஷமதாய் தீர்ந்து விடும் தெளிவதாக
ஆகுமே கரப்பனொடு பனிகள் தீரும்
அடுத்த மலக்கட்டு சொறி குணமதாமே.

பித்த சிகப்புக்கு கஷாயம்.

270. குணமான வில்லை வேர் சித்தா முட்டி
குளிர்ந்த தெற்றி மலருடனே பிச்சிமொட்டு

நிணமான பருத்தி மலர் ஆடாதோடை
    நிலுட்டை விளர்ணுக் கிராந்தியொடு தளையின் பத்திரம்
மணமான கொத்தமல்லி சிறு சீர் ஏலம்
    மகிழ்ந்த சுக்கு நெல்பொரியும் அமிர்தம் கூட்டி
குணமாகப் புவரசு கறுத்த சூரை
    திரண்ட சந்தம் ரண்டுடனே மதுரம் புலா

280. மதுரமொடு சாத்திரமாம் பேதி கொட்டம்
    மறுதுளசி சிறு நெரிஞ்சி அருகு ரண்டும்
சதுரமுடன் கொடி மூலம் தென்னை வடு
    சதா வேலிக்கிழங்குடனே நெரிஞ்சி முள்ளும்
உதிரமென்ற சாரணை வேர் திரிப்பன் புல்லும்
    உற்ற நிம்பப் பட்டையுடன்தோடைவேரும்
மிதிரமென்ற மாதளையின் மலரோடொப்பம்
    மிகவுமொன்றுக் கூட்டியிதை கஷாயத்தாக்கே.

281. ஆக்கியதோர் கஷாயமதை அருந்தும்போது
    அடவான் பித்தத்தின் சிகப்பதெல்லாம்
நீக்கியதோர் வீக்கமொடு சிறு நீர் கட்டும்
    நிலையதான விஷ பாகம் கபநீர் சன்னி
வாக்குடனே ஆறு தினம் உண்ணும்போது
    வாராது முன்னேய்கள் வலுமையாக
தூக்கியதோர் சிகப்பு தொகை உஷ்ணக்காச்சல்
    சூஷமதாய் தீருமிது சூஷந்தானே.

சிலேஷ்மபன சிகப்புக்கு கஷாயமும் குளிகையும்.

282. சூஷமாம் சிலேற்பனத்தின் சிகப்புக்கெல்லாம்
    சொல்லுகிறேன் தூதுவளைசமூலம் வாங்கி
ஆச்சியுடன் அப்புவிட்டு எட்டொன்றுக்கி
    அருந்திடவே சங்களவு குளிகை கேளு
தாச்சியில்லா தெந்தியுடன் கருஞ்சூரைத் தோல்
    தாய் முலைப்பால் தன்னிலங்கரைத்தருட்டி
மாச்சியுடன் கரைத்தருந்து முன்னே சொன்ன
    மகத்தான பிணி நீங்கும் மகிழ்ச்சியாமே.

சிறிய நிம்பாதி கஷாயம்.

283. ஆமப்பா சிறுவருக்கு சிகப்பு ரோகம்
    அவனியெல்லாம் அடங்கி நின்ற அதிஉஷ்ண துன்பம்

ஏமப்பா படுவனொடு வீக்கம் பொன்னி
        இயல்வான சிரங்கு பனி கரப்பனொடு
நாமப்பாகிரந்தி பல நோய்கள் தீர
நன்மையுடன் நிம்பாதிக்கஷாயங் கேளு
தாமப்பா நிம்பத்தோல் ஆடாதோடை
        தருவான கறுத்த சுண்டைபுடோலந்தானே.

284. தானை தெற்றிவேர் இலையும் பூவும்
        தக்கதொரு திரிபலையும் சுக்கு மஞ்சள்
ஏனை கருஞ்சீரம் குக்கில்ப் பட்டை
        எடுத்திடவே கருஞ்சூரை அமுக்கூர வேரும்
பானை வகைக்கு ஒரு சமனாய் வாங்கி
        பாளியிற்படியளந்து எட்டொன்றுக்கி
தேனை சிறு சீரம் மேலே தூவி
        சொன்னதொரு பாலகர்க்குக் கொடுத்திடாயே.

287. நோயான கிரந்தியது இரு நான்குந்தான்
        நுணுக்கமாம் சிகப்பு நோய் அரபுக்திலும்
தாயான அக்கரமும் பிளவை சூலை
        தணிந்து வந்த நீரடைப்பு விஷ பாகங்கள்
வேயான அலர்க்கிரந்தி உள்ளு நோயும்
        வேருண்ட பல உள் சிரங்கு கிருமி நோயும்
ஈயான அண்டத்தில் கிரந்தியோடு
        இன்னும் போம் பலநோய்க்ள் இசம்புவேனே.

சிகப்பில் சன்னி சுரம் குடோரம் தீர கஷாயம்.

289. செப்புவேன் சிகப்பில் வரும் சன்னி சன்னிக்கெல்லாம்
        சீரான கஷாயமொன்று சிறந்து கேளு
ஒப்புவேன் நிலவேரு தாருவேரு
        உற்றதொரு முசிறு முட்டை விடந்தைப்பட்டை
தப்பவே கொடி சூரை முருங்கைப் பூவும்
        தக்க இஞ்சி ஏலமுடன் உள்ளிருயன்
கப்புடனே சிறு தேக்கு அரத்தைக் கூட்டி
        கஷாயமிட்டு எட்டொன்றாய் இறுத்துக் கொள்ளே

290.

கொள்ளவே மூன்றரை நாள் இருநேரந்தான்
குறையாமல் பால்கர்த்கந் கருந்தும்போதும்
தள்ளியே பறக்குமடா சிகப்பில் தோஉஷம்
ஓடருகின்ற குடோரமுடன் சன்னி தீரும்
விள்ளவே சுரமுடனே கபமும் இக்கிள்
விட்டு விடும் கடல் தேப்புக்கும் வீச்சு
கள்ளமே இல்லையடா வேர்வை தீரும்
கண்டறிந்து செய்தவர்க்குக் கருத்துள்ளோரே.

61. சிகப்புக்கும் வேடு.

291. கருத்து கந்து வந்ததொரு சிகப்புத்தீர
கடல்வர்ணன் சொன்ன மொழி பிசகிடாமல்
விரும்புகின்ற செம்பருத்தி பூவரசு
மிகுந்த இலை பூவரசன் பட்டை சூரை
பெருத்து நின்று சுருங்கி நிற்கும் குறத்தி மூலி
பெரிய வெற்றிலை துளசி தெற்றி ஈரவுள்ளி
குருத்துயர்ந்து வளருகின்ற செடி செந்நெரிஞ்சி
கொடி மூலி மிளகு ரண்டு சீரம் கூட்டே.

292. கூட்டியதோர் மருந்ததனைப்பொடித்தரிந்து
கூசாமல் பாண்டமொன்றில் சலத்தைவிட்டு
நாட்டியதோர் வெள்சீலை வேடுகட்டு
நலமாக கொங்கைப் பால் மருந்தில் தூவி
முட்டியதோர் வேடத்தின் மேல் மருந்தைவைத்து
முறையாகமேல் மூடி அவித்திறக்கி
நீட்டியதோர் கையதினுல் பிழிந்திழுத்து
நிசமாக ரோசனையும் கூடத்தாக்கே.

அனுபானம்.

293. தாக்கிடவே சிகப்பு தகை 64-ம்
தவர்ந்து விடும் நீரையது தொடர்ந்து தானுல்
நீக்கிவிடும் ஏலம் இந்து காயந்தாதும்
நிசமாக இடித்த பொடி எடுத்துப் போடு
வாக்குடனே சிகப்பதிலேதீரை போகும்
வகுத்த மலக்கட்டுடனே சலக்கடானுல்

போக்கிவிடும் ரோகணியும் கடுக்காய் வளைதை
புகலுகின்ற சிவதை சமன் பொடித்துப் போடே.

சிகப்பில் கழிச்சலுக்கு வேடு.

294. போட்டிடவே மலமிறங்கும் சலமிறங்கும்
புதல்வருட சிகப்பதில கழிச்சல் கண்டால்
கூட்டிடவே மாதளையின் இலையுமுத்தம்
[illegible] கொங்கைபால் வேடவித்து புழிந்திறுத்து
ஊட்டிடவே சிகப்பதிலே கழிச்சல் ரெத்தம்
ஓடிவிடும் மாத்திரையும் அறிந்து தாக்கு
நாட்டியதோர் சிகப்பதிலே சன்னி தீர
நலமாக வேடதொன்று நாட்டுறேனே.

சிகப்பில் சன்னிக்கு வேடு.

295. நாட்டுகிறேன் முருங்கைப்பூவெள்ளுள்ளி
நல்லதொரு தும்பைப் பூ இலையுமாக
காட்டிலுள்ள கொழிஞ்சி வேர்தொலியுங் கூட்டி
களுக்காக ஒரு நிறையாய் சதைத்து வாரி
ஏட்டிலுள்ள முறை போலெ வேடு கட்டி
இளமுலைப்பால் தனில் விரவிவேட்டில் வைத்து
பாட்டிலுள்ள படியாக சட்டி மூடி
பதமாக அவித்திறக்கிபுழிந்து கொள்ளே.

296. கொள்ளவே தயிலமொடு மாத்திரையுங் கூட்டி
கூறன பாலகர்க்கங் கூட்டும் போது
தள்ளியே பறக்குமடா சிகப்பில் சன்னி
தொடர்ந்த பல சுரமுடனே வலிகள் வீச்சு
கள்ளமே இல்லையடா விறையல் விக்கல்
காணமல் ஓடிவிடும் சிகப்பில் தோஷம்
உள்ளே மேலாடுகின்ற வியாதி யெல்லாம்
ஒழியுமடா சிகப்பில் வரும் வியாதி பாரே.

சிகப்பில் சன்னிக்குத் தயிலம்

297. பாரப்பா சன்னி வகை பிறந்திட்டாலும்
பாலகர்க்கங்கொரு தயிலம் பண்பாய் கேளு
நேரப்பா முதலியுட மூலந்தன்னை
நிசமான வெண்புரும் வசம்புங் கூட்டி

சீரப்பா முதலிடும் ஆல் நீதனை

நிசமான வெள்ளரும் வசம்புங் கூட்டி

சீரப்பா நிம்ப எண்ணெய் தனிலே போட்டு

சிவக்கப் பொரிந்திடும் பத்தில் வடித்துப் பூச

வாரப்பா சிகப்பதிலே சன்னியொன்றும்

வாராது கர்சிடை கொள் உள்ளுக்கென்றே.

சிகப்பு நீர் பருவனுக்கு பூச்சு.

298. என்றெனவே உரைத்த மொழி பிசகிடாது

எழுந்த பல சிகப்புடனே வியாதி போக

நன்றெனவே சொல்லுகிறேன் பூச்சதொன்று

நலமான மருங்கையித்தி காரை நாலும்

நின்றெனவே காடுதனில அரிளி வேரும்

நிசமான கருஞ்சூரை வசம்பும் கூட்டி

அன்றெனவே காடி விட்டு அரைத்துன்ழ போல்

அப்பனே வழித்து தனைப் பூசும்போதே.

299. பூசிடவே வியாதியெல்லாம் பொசுங்கிப்போகும்

புதல்வருடபருவனது மாண்டு போகும்

வர்சியாம் பிளசையொடு பிளவைப்புச்சி

வலிய அரையாப்புடனே வற்றிப்போகும்

தூசியதாய் பறந்து விடும் சிகப்பு நாகன்

தொலைந்து விடும் சூலையது அரனார் சொன்னார்

காசினியில் மதலைகள்க் காய் சொன்னேனிந்த

கை கண்ட ஓச்சு மருந்ததனைக் கேளே.

வேறு பூச்சு.

300. கேளேதான் திரிகடுகு வறட்டு மஞ்சள்

இனி கிளரும் நன்றி களிப்பாக்கு சாம்பிராணி

தாளேதான் கருஞ்சூரை முத்தக்காசு

தக்க குக்கில் கடுக்காயும் வசம்பு பச்சை

ஆளேதான் நிலப்பனை வேர் சமனாய் கூட்டி

அறிந்து பொடி முட்டை வெள்கருவாலாட்டி

வாளேதான் துணி பரத்தி பற்றப் போட

வந்தெழுந்த பருப்பருவன் வற்றிப்போமே.

வேறு பூச்சு.

301. கேளேதான் திரிகடுகு வறட்டு மஞ்சள்

திரிகிகு கிளரும் நன்றி களிப்பாக்கு சாம்பிராணி

தாளேதான் கருஞ்சூரை முத்தக்காசு

தக்க குக்கில் கடுக்காயும் செம்பு பச்சை
ஆளேதான் நிலப்பனைவேர் சமமாய் கூட்டி
அரிந்து பொடி முட்டை வெண் கருவாலாட்டி
வாளேதான் துணிபரத்தி பற்றுப் போட
வந்தெழுந்த பருப்பருவன் வற்றிப்போமே

வேறு பூச்சு

301. போமப்பா நல்மிகு நச்சறுத்தான் வேரு
புகழான கருஞ்சூரை அமுக்கூர வேரும்
தாம்ப்பா வேகமொடு ஓரிலையின் மூலம்
தக்க வகை கதம்பை நீர் தன்னிலே ஆட்டி
நாமப்பா வெதுப்பி யதை அடக்கிப் பூச
நலமாகும் பருவனெல்லாம் நயந்து வற்றும்
காமப்பா கடுத்து ஊந்த வீக்கம் வற்றும்
கை கண்ட வித்தை யிது கருத்தாய்ப்போரே.

வற்றவும் உடையவும் பூச்சு மருந்து.

302, பாரப்பா குமரியொடு சிவந்திருள்ளி
பயிலி மாதளை முசட்டை பழம்பாசியோடு
நேரப்பா விடத்தை இலை புளியின் ஆரை
நேரான அடம்பு தளிர் வகையோடெல்லாம்
ஊரப்பா அரிந்து களிநீர் தன்னில்
உண்மையுடன் தான வித்து அரைத்து மைந்தா
சேரப்பா வெண்ணெய்தக்கிடைதான் கூட்டி
செயனித்து பூசிடவே சாந்தமாமே.

303. சாந்தமாம் பருப்பிளவை வீக்கம் பொன்னி
தக்கதோர் சிகப்புக்கெட்டு நீர்க்கெட்டெல்லாம்
பாந்தமாம் உளைவுடனே காந்தல் குத்தும்
புனி குளிர்கள் படர்ந்த சிகப்பதி வேக்கங்கள்
ஒய்ந்த நீர் வற்றிடவும் பழுத்துச் சீழும்
உடைந்த போம் உண்மையிது உமைதன்னுனே.
பாய்ந்த சீழ் சலம் புரவு சாந்தமாம்
பாடுகிறேன் புரவெண்ணெய் பரிந்து கேளே.

புரவெண்ணெய்.

304. பரிந்து தேள் புங்கிரட பாலுழக்கு
பகர் பல்லி பா ஊயி லைச்சாறுழக்கு

நிரந்து பார் முடிதாரம் துருசு துத்தம்
நிலேயாக ஓர் சமனுய் நிரப்பிக் கொண்டு
மருந்தெல்லாம் ஒன்றித்து குரும்பை நெய்யில்
மகத்தாகத்தாலெரித்து மணல் பத்தில்
சொரிந்து பார் புரவறுக்கும் புண்கள் தீரும்
சொல்லுவேன் குளிகையது விரைந்து பாரே

சீனப்பா குளிகை.

பார்க்கையிலே பறந்தியுட் மைமைமை பட்டை சூரை
பாங்கான தலேயூர் சேர் மூலமாகும்
தீர்க்கமுடன் குக்கில் கார் சீரம் ரண்டும்
சிறப்பான சாதிலிங்கம் சுத்தி செய்து
ஆர்க்கையிலே ஒரு நிறையாய் முலேப்பால் தன்னல்
சூக்ஷமுடன் தானரைத்து உருட்டிக்குன்றி
வார்க்கையிலே சீரகத்தின் கஷாயந்தா ட்ட
வாராது சிகப்பு தகை அறுபத்திநாலும்.

306. அறுபத்திநான்குடனே சிகப்புத்தீரும்
அன்பத்தி ஐந்து வகை கரப்பன் தீரும்
சொறி பற்றும் கிரந்தியொடு தளப்பு தீரும்
சூக்ஷமதாய் பறங்கி வகை கரிந்து போகும்
அறிந்துடனே வகுப்பறிந்து கஷாயத்தா ட்டே
அடங்காத ரணங்களெல்லா மாறிப்போகும்
தெறித்து விடும் அ ரயாப்பு சூலேக்கெட்டு
செகதலத்தோர் அறிய இன்னம் கூறக்கேளே.

கெருடாதிக் குளிகை.

307. கூறக்கேள் கெருடாட மூலிவேரும்
குணமான மிளகு கருஞ்சூரைப்பட்டை
ஊறக்கேள் கருஞ்சீரம் சீனப்பாவும்
உண்மையுடன் தானிடித்து வடியே செய்து
தேறக்கேள் நிழல் தீண்டான் மூலிச்சாற்றில்
சேர வரை சாமமது மூன்று சென்றல்
பாரமுடன் குன்றி பேரில் உருட்டிக் கொண்டு
பகலவன் தான் காணுதே நிழலில் வையே
வைத்துடன் கொத்தமல்லி சீரம் ரோணி
வகையான முந்திரிகை நிலவாகை தாவும்

308. சித்தமுடன் கஷாயமிட்டு குளிகையொன்று
சேர்த்துரைத்து மூன்று நாள் ஊட்டும்போது
பற்றறவே சிகப்பென்ற வகைகளெல்லாம்
பரிசு கெட்டு பாரு விட்டு ஓடிப்போகும்
புத்தியுடன் மலசலங்கள் கழிந்து போகும்
புண்ணியனே புண்ணியனே சன்னி வகை தீர்க்கக் கேளே.

309. கேளப்பா இஞ்சி உள்ளி புழிந்த நீரில்
கேடில்லா குளிகையொன்று கொடுக்க தீரும்
ஆளப்பா திற்பிலி நற்சீரமிட்டு
அழகான வெந்தயமும் அரத்தை மூலம்
பாளப்பா கஷாயமிட்டு அருந்தும் போது
பாலகனே கப சுரங்கள் பறந்து போகும்
காளப்பா கை கண்ட குளிகை யொன்று
காசினியில் சொல்லிவிட்டேன் கருத்தாய்தானே.

தங்கவராதி.

310. தானான தங்கமொடு முத்து வெள்ளி
தருவான ருத்திரமும் கலையின் கொம்பு
மானே கேள் கோரோசனைம் பவழத்தோடு
மகத்தான கற்பூரம் ரோசனை கஸ்தூரி
ஊறான புழுகு கருஞ்சூரை நேத்த
உற்ற சந்தம் பேதியொடு மதுரம் புலா
வானான ஏலமொடு கடுகு ரோணி
வகையான அக்கிரு அரத்தை பல்லி
(பல்லி -- திற்பிலி)

311. பல்லியொடு அரிதகியும் பீத ரோணி
பாலகனே உழுவாயும் வெள்ளைப்பூடு
துல்லியமாய் நிறைவகைக்கு சரியாய் வாங்கி
துஷ்டமுடன் இஞ்சிச்சாறு தனிலே ஆட்டி
வல்லியே பயறளவு உருண்டை செய்து
வலுவான குழந்தை நோய் அறிந்து ஊட்ட
தல்லியமே சீரகத்தில் கொள்ளும் போது
சருவ சுரம் கபமுடனே சிகப்புப் போமே.

312. போமப்பா காசவக்க சிகப்பில் தோஷம்
பொல்லாத சன்னியதும் ஊசிரோகம்
தாமப்பா இஞ்சியது புழிந்த நீரில்
சர்வ தீரை பிரளியதும் திவிர்ந்து போகும்
ஏமப்பா சிகப்பு தொகை அறுபத்தினும்
ஏகிவிடும் அக்கரமும் வாயில் புண்ணும்
நாமப்பா பாதங்க நகராதியிந்த
நலமான குளிகையிது உலகத்தோரே.

சிகப்புபடுவன் சன்னிக்கு குளிகை.

313. உலகத்தோர் பிழைப்பதற்கு குளிகை யொன்று
ஒரு பலம் வேர் கருஞ்சூரை இடித்துப் போட்டு
மலயாமல் சாதிலிங்கம் சுத்தி செய்து
மைந்தனே ஒரு கழஞ்சு பொடித்து சேர்த்து
குலையாமல் முலைப்பாலால் ஆட்டி வாங்கு
குளிகை சிறு பயறளவு உருட்டிக் கொள்ள
பலயான சிறு சீரம் முலைப்பால் ஆட்டின்
பாலதிலே மைந்தருக்கு ஊட்டிடாயே.

314. ஊட்டிடவே சிகப்பெங்கே நீர்களெங்கே
உயர்ந்தெழுந்த பொன்னியொரு படுவனெங்கே
நீட்டி வரும் சிகப்பதிலே சன்னி தோஷம்
நெடுஞ்சுரங்கள் இறங்கலொடு ஏற்றம் தோடை
காட்டிய தோர் செம்முள்ளி கஷாயமிட்டு
கனத்த உடல் வேதிடவே கழன்று போகும்
பாட்டிலே சொன்னபடி அரைத்து முத்தன் தன்னை
பால்தனிலே அரைத்துடனே பூச்ப்போமே.

குங்குமப்பு குளிகை.

315. போவதற்கு குளிகையொன்று புகலக்கேளு
புகழான குங்குமப்பு தேற்றான் கொட்டை
ஆவதற்கு அதிமதுரம் வெள்ளவுள்ளி
அப்பனே காயமொடு கடுகுரோகணி
ஏவதற்கு திற்பிலியும் கடுக்காய் தோடும்
இந்துப்பு அரத்தையொடு சிறு தேக்கென்னும்
நோவதற்கு கருஞ்சூரை ரெத்த சந்தம்
நொய்ய சிறு பேதியொடு பூசிதானே.

316. தானன இமிர்து வள்ளி சாகத்தாலே
தானரைப்பாய் ஒரு சாமம் தோடைச்சாற்றல்
மானன ஏலமொன்ற ? கஷாயத்தாலே
மகிமையுடன் தானரைப்பாய் குறத்தி முலை
ஊனன சாமமொன்று கழிந்தால் பின்னே
உழுந்தளவு உண்டை செய்து நிழலுலர்த்தி
தேனன சிறு வருக்கு முலைப்பாலோடே
சேர்த்துமே அருந்திடு சிகப்பு போமே.

317. போமப்பா சிகப்பு தகை அறுபத்திலும்
புடைத்தெழுந்த கரப்பன் வகை 55-ம்
தாமப்பா அக்கரமும் புனி.சுரங்கள் சன்னி
சாந்தமாம் கபதோஷம் வாய்புப்பெல்லாமி
நாமப்பா தீரையது சிகப்பில் தொந்தம்
நாசமாம் பிரளியதும அறுபானத்தில்
அறைந்து விட்டேன் கை கண்ட ஞுகூ நதானே,
ஆமப்பா குங்குமப்பூ குளிகை தன்னை

திரிகடுகு குளிகை.

318. ஞுகூமென்றல் இன்னுமொரு குளிகை கேளு
துநசமுடன் திரிகடுகு ஏலம் கொட்டம்
காச்சையுடன் அதிமதுரம் கூரைப்பட்டை ட
கடியதொரு குங்குமப்பூ சந்தம் ரண்டும்
பாச்சலுடன் இடித்துப பொடிவடியே செய்து
பாங்கான கொடிக்கள்ளி பழச்சாற்றலே
மீச்சையுடன் தானரைத்து உண்டை செய்து
வெள்ளை முலைப்பாலதிலே ஊட்டுவாயே.

319. ஊட்டிடுவாய் சிகப்புதகை அறுபத்திலும்
உண்டான் தளப்புடனே தீரை போகும்
நாட்டிடவே கிரந்தி வகை தவர்ந்து போகும்
நடுக்கமுற்ற சன்னியதும் பிரளி தீரும்
நீட்டிடவே சிகப்பில் வரும் பனி சுரங்கள்
நில்லாது திரிகடுகு குளிகை தன்னல்
ஞுட்டிடவே நோய்களெல்லாம் பறந்து போகும்
ம் தொடந்த மலம் கழிசசலுக்கு குளிகை கேளே.

மலக்கட்டுக்கும் வீக்கத்துக்கும் சந்தஞதிக் குளிகை.

320. கேளப்பா சந்தனமோ பலந்தாஜென்று
கெடில்லா வாளமரைப்பலமே வாங்கி
(சந்தனம் பலம் 1, வாளம் பலம் அரை)
நாளப்பா முலைப்பால் விட்டரைத்துக் கொண்டு
நால் சாமம் கழிந்ததின் பின் பயறு போலெ
பாளப்பா போகாமல் உருட்டிக் கொண்டு
பகலவன்தான் காணமல் மறைவில் வைத்து
[illegible] வேளப்பா உலர்ந்த பின்பு பதனம் பண்ணி
வெகு நோய்க்குக் கொடுத்திடவே தீரும் பாரே.

321. பாரப்பா முலைப்பாலில் அருந்தும் போது
பாலகர் தன் மலக்கட்டு கழிந்து போகும்
ஊரப்பா பிரளி வகை தீரை கோபம்
உடல்தனிலே எழுந்த விஷ பாகம் போகும்
தூரப்பா குளிர் சுரங்கள் மாறிப்போகும்
தொடர்ந்த சுரக்குளிகை யிதுக்கொவ்விடாது
சூரப்பா மைந்தருக்கு சுரங்கள் தீர
சூக்ஷமதாங் குளிகையொன்று தொடர்ந்து கேளே

சிகப்பில் சுரத்துக்கு சாதிலிங்கக் குளிகை.

321. கேளப்பா சாதிலிங்கம் சுத்தி செய்து
கெறவான திற்பிலித் தூள் நாலிரட்டி
ஆளப்பா முலைப்பால் விட்டரை நால் சாமம்
அதின் பிறகு இஞ்சிச்சாறு அதிலே யூட்டி
நாளப்பா பயறளவு உண்டை செய்து
நான் முகனைப்பணிந்து நாட்டுள்ளோர்க்கு
கூளப்பா அரத்தை திற்பிலி மூலங்கூட்டி
குடி நீரில் கொடுத்திடவே சுரங்கள் போமே.

322. போகுமே சிகப்பில் வரும் சன்னிதானும்
பொல்லாத வலியுடனே குடோரம் மாறும்
பாகமே பாலகரே ஞருத்தஞ் செய்யும்
பரிவான சுரமுடனே பிரதோஷம்
ஏகுமே சுரத்தில் வரும் தோஷம் சீதம்
எய்யாது ஏழுகடலுக்கப்பால் போகும்
ஆகுமே இன்னுமொரு குளிகை தாறும்
அறிந்திட்டபடி சந்தஞதி யென்னே.

323. போருமே சிகப்பில் வரும் சன்னிதாரும்
பொல்லாத வலியுடனே குடோரம் மாறும்
பாகமே பாலகரே வருத்தச் செய்யும்
பரிவான சுரமுடனே பிரதோஷம்
ஏருமே சுரத்தில் வரும் தோஷம சீதம்
எய்யாது எழுகடலுக்கப்பால் போகும்
ஆருமே இன்றொரு குளிகைதாரும்
அறிந்திட்டபடி சந்தனாதியென்னே.

சிகப்புக்கு சந்தனாதி குளிகை.

323. சந்தனம் அரிசியாறு
சார்ந்த சீரம் மூன்று தாசம்
அந்த வால் மிளகு ரண்டும்
அதிகமாம் மதுரம் மூலம்
முந்திய வசம்பு பாலே
மூன்ற முக்கூரம் சூரை
ஏந்திய ரெத்த சந்தம்
எடுத்தரை சாஸ்திர பேதி.

324. சாஸ்திரப் பேதி பூலா தீ
தனித்த நல் சீனப்பாவும்
கோத்திமரயிடித்து
கொடிய நல்வடியே செய்து
பொத்திரமாகப் பத்து
புஷ்பத்தின் சாறு வாங்கு
நேத்திரமா யரைத்து
நிகழ்த்து வேன் உழுந்த மட்டும்

325. மட்டமாய் உருட்டிக் கொண்டு மங்கைபால் தனிலே கொள்ள
உட்டனம் முப்பத்தாறும் உறுசிகப்பறுத்திறுலும்
வட்டமாங் கரப்பநேடு வருந்திய சுரங்கள் தீரும்
திட்டமாம் சந்தனாதி தீர்ந்திடும் கிரந்தி தானே.

சிறு சந்தனாதி குளிகை.

326. தானமாம் இன்னுமொரு குளிகை சொல்வேன்
தயவான சந்தமது ரண்டும் பூலா
ஏனமாமதுரமொடு பட்டை சூரை
இதமான தெற்றிப்பூ கமலத் தல்லி

பானமாம் திற்பிலியும் அரத்தை நன்றி

பாங்கான குங்குமப்பூ பிரிசாம் பேதி

கோனமாங் கொட்டமொடு குறத்திச் சாற்றில்

குணமான செம்பருத்தி பூச்சாற்றுட்டே

327. ஆட்டியே இருசாமம் அரைத்துருட்டி

அடவாக நிழலுலர்த்தி பாலர்க்கூட்ட

நாட்டிலே சிகப்பு தொகை அரபத்திஞலும்

நால் காதம் ஓடுமடா கரப்பனூரல்

கூட்டிலே சூலையொடு கிரந்தி தாஉம்

குடிபோகும் சிகப்பிலெழும் சுரங்களெல்லாம்

காட்டிலே பறந்திடுமே உதட்டில் பூம்பு

கை கண்ட சந்தகுதியிது தப்பாதே.

பூபதி மாத்திரை.

328. தப்பாது பூபதி மாத்திரைதான் சொல்வேன்

சாதிலிங்கம் பூங்காவி ரச கற்பூரம்

ஒப்பாத ஏலமுடன் சூரை நன்றி

ஒன்றப்பாதிற்பிலியும் சாத்திர பேதி

வப்பில்லா ரெத்த சந்தம் பூகா விருக்ஷம

உற்பன வகையான மதுரமொடு அரத்தை யக்கிரு

உற்பனமாம் கோதம் பூ கஞ்சி வார்த்து

உண்மையுடன் தானரைத்து உருட்டு வாயே.

329. உருட்டி வைத்து குளிகை தனை முலைப்பாலில்

உறவான சீரக நீர்தனிலே கொள்ள

மருட்டுகின்ற சன்னியொடு சுரங்கள், சேற்பம்

மகத்தான சிகப்பிஞெடு கரப்பன் சூலை

திரட்டுகின்ற இருமலொடு சுழீயன் இழை

திட்டான பொரும்லொடு மாந்தக் கெட்டு

அருட்டான உள்வியாதி புறவியாதி

அகலாத நோய்களெல்லாம் அகன்று போமே.

தங்கவராதி குளிகை.

330. போகுதற்கு இன்னுமொரு குளிகை கேளு

புலத்தியனே தங்கமொடு பவழமுத்து

வேகமுள்ள புநகு ரோசனையும் வல்லி

வெருண்ட தாமரையல்லி ஓரிலையும் நங்கை
பாகலுடன் குங்குமப்பூ நன்றி தூரை
பகர்ந்த கலங்கொம்பு காண்டாமிருகக் கொம்பு
ஓகோகோ என்ன சொல்வேன் மதுரம் அக்கிரு
உகந்த சந்தம் பூலாவும் சாத்திர பேதி

331. பேதியுடன் கொடி வேரும் தெற்றி மூலம்
பெருவாகை செம்பருத்தி வேருங் கூட்டி
ஆதியென்ற அமுக்கூரம் ஆகதியும் ஏலம்
அடவான காயமிந்து நிலவேர் முட்டை
வேதியென்ற சாதிலிங்கம் கற்பூரம் பச்சை
வெண்மையுள்ள பூங்காவி சீனப்பாவும்
வீதியுடன் மருந்து வகை கட்டிக் கொண்டு
விளம்புவேன் முலைப்பாலில் சாமம் ஒன்றே

332. ஒன்றே கேள் இஞ்சிச்சாறு தெற்றிப்பூவின்
உகந்த செம்பருத்தி மலர் பன்னீர் தன்னில்
நன்றான கழுதையுட பாலிலாட்டி
நலமான குளிகை குன்றியளவுருட்டி
பன்றான இஞ்சிச்சாறு முலைப்பால் தன்னில்
பற்றுகின்ற சிகப்பு தோஷ்க அரபத்திலும்
மன்றான சுரம் சன்னி கரப்பனொடு
மகத்தான கிரந்தி முதல் பறக்கும் நீர் பாரே.

333. பாரப்பா பூவரசம் பட்டை காயும்
பாங்கான செம்பருத்தி இலையும் தெற்றி
நேரப்பா மலருடனே அவரி பத்திரம்
நேசமுள்ள ஈருள்ளி கழுதை லொத்தி
ஊரிவுள்ள குப்பியிலைச்சாறும் கூட்டி
உண்மையுடன் . . . .

இடித்த நீர் பாலில் கூட்டி
336. ஊறுன சிறு சீரம் ரெத்த சந்தம்
உற்ற கருஞ்சூரையொடு பூலா பேதி
வேறுன குக்கிலொடு சீனப்பாவும்
வெண்கழுதைமல நீரில் அரைத்து சேர்த்து
ஆறுன மழுகு பதம் தனிலரித்து

அருந்திடுகில் சிகப்பதெல்லாம் அகன்று போமே.

337. அகன்றுபோம் கரப்பனொடு கிரந்தி சூலை
அரியதோடு குரல் கம்மல் பவுந்திரங்கள்
திகன்று போம் ஊரலொடு சொறி சிரங்கு
திணப்புடனே அரையாப்பும் தெறித்தே போகும்
தகன்றுபோம் தோலுரிவு பறங்கி பொன்னி
தயங்கியே நில்லாது பொக்கள்தாமும்
உகன்று போம் மதலையுடல் தங்கமாகும்
உறுதியாம் முன்னையெய்கள் ￼ ஒழிந்து போமே.

சிகப்பு எல்லாத்துக்கும் சிறு பீளை தயிலம்.

338. போகுமே சிகப்புக் கோர் தயிலஞ் சொல்வேன்
போக்கான சிறு பிள்ளை பிடிதான் வாங்கி
ஆகுமே அரைத்துருட்டி தேங்காய் பாலில்
அடவாகத்தான் கலக்கு மெழுகில் வார்த்து
தாகுமே ஆறுதினம் ஊட்டும் போது
சுட ரொளிபோல் எழுந்த சிகப்புறபத்தி நான்கும்
வேகமுடன் வாய் பூப்பு அக்கரங்கள்
வெருண்டோடிப் போகுமென்று உரைத்திட்டேனே.

சிகப்புக்கு நறுநன்றித்தயிலம்.

339. உரைத்திட்டேன் நறுநன்றி பலந்தானென்று
உண்மையுடன் மேல் தோலையும் தோலைத்தள்ளிப்போட்டு
கரைத்திட்ட உள் நரம்பும் களைந்து வாங்கி
கடிய சிவந்துள்ளி பலம் அரையுங் கூட்டி
நீரை த்திட்டக்கருஞ்சூரை கழச்ச தாறு
நிச்சயமாய் நீயரைத்து தேங்காய் பாலில்
பரைத்திரமாக இதைக்கலக்கிக் கொண்டு
பாங்கான மெழுகுறைத்து பருவம் வாங்கே

340. வாங்கி நீ தயிலமிது உள்ளே கொண்டு
வழுவாக உடம்பு தலை பூசு பூசு
நீங்கிடுமே சிகப்பு தொகை 64-ம்
நிலையான அக்கரங்கள் நிமிஷம் போகும்
தாங்கி நின்ற வாய்ப்புண்ணு செங்கிரந்தி
தொடர் கரப்பனுடமே சூடு ந்தீரும்
ஓங்கியதோர் செங்கரப்பன் அடர்ந்து போமே.

ஒருவருக்கும் சொல்லாதே உலகத்தோரே.

வாத சிகப்பு எல்லாத்துக்கும் நெய்.

341. உலகத்தோர் பிழைப்பதற்கு நெய்யுமொன்று

உண்மையுடன் செந்நெரிஞ்சி துள சீருள்ளி

மலையாமல் செம்பருத்திப் பூவினோடும்

மைந்தனே இடித்துச் சாறு பிழிந்து கொண்டு

குலையாமல் பசுவின் நெய் உரியுங் கூட்டி

குணமான சீரகமும் ரண்டும் சேர்த்து

அலையாமல் அரைத்தெரித்து மெழுகில் வார்த்து

அருந்திடவே பாலருட சிகப்பு போமே.

342. போகுமே குறத்தியென்ற மூலிதன் னை

புண்ணியனே இடித்துச்சாறுழக்கு வாங்கி

ஆகுமே சீரகமும் ரண்டு உள்ளி

அடவாகத்தானரைத்துக் கொண்டு

தூகுமே பசுவின் நெய் உழக்கு விட்டு

சூக்ஷமதாய் மெழுகு பதம் வடித்து வாங்கி

கூகின தோர் பால்கர்க்கருந்தும் போது

குணமாகும் வாதத்தில் சிகப்பெல்லாமே.

343. சிகப்பெல்லாம் தீர்ந்து விடும் தணப்பு சூரல்

திறமான குத்தில் புண் குரளு கம்மல்

வருப்பெல்லாம் தோலுரிவு ரணங்கள் காந்தல்

வாலையுட இருமல் இரு மலமும் தெளிந்திரங்கும்

தொகுப்பெல்லாம் மெலிந்த உடல் பிரகாசிக்கும்

தொல்லுலகில் கும்பஜரை பிசகிடாது

பகைப்புள்ள முன்னோய்கள் பறந்து போகும்

பாருலகில் நெய் வடித்துப் பருக வூட்டே.

எல்லா சிகப்புக்கும் கிருதம்

344. ஊட்டிடவே இன்னமொரு கிருதங் கேளு

உண்மையுடன் குமரிச்சாறு படியுழக்கு

காட்டினதோர் காராவின் நெய்யுழக்கில்

கடிய சிவந்துள்ளி நங்கை அரைத்துப் போட்டு

நீட்டினதோர் மெழுகதில் வடித்து மைந்தா

நிச்சயமாய் காசளவுங்கருந்தும் போது

சூட்டினதோர் சிகப்பு தொகை எல்லாம் போகும்

சுடரொளியுள் பொருளான கைந்தன்வாக்கே.

345. வாக்காகும் சொறி சிரங்கு குத்தில் புண்ணு
வகையான தோலுரிவு அரையில் புண்ணு
போக்கான தணப்புடனே பொறிகளூரல்
பொல்லாத கை மூலத்தழுகல் தானும்
சீக்கான கழுத்தடியில் புண்ணுந் தீரும்
சிறுவருக்கு இன்னும் வகையொன்று கேளு
பார்க்கவே பலபிணிக்கும் மருந்ததாக
பாட்டுவேன் பவுசு பெற பாலகர்க்கே.

சிகப்பெல்லாத்துக்கும் கேசரி நெய்.

பாலகர்க்கு வந்த சிகப்பெல்லாந் தீர
பாங்கான கேசரி நெய் சொல்லக் கேளு
சீலமுடன் முருககிலையும் திரிப்பன் செம்பொன்
சிறு நெரிஞ்சி கொற்றானும் சிறியா நங்கை
ஞாலமுடன் தகரை முத்தம் மேனி சங்கு
நல்லதொரு இசங்கிலையும் பருத்தி தானும்
கோலமிளகிலைதான்றி பழச்சாறேடு
கொடியவல்லிகழ்ச்சியிலை முசுக்கை சேரே.

347. சேரே சாரணையிலையும் ஈரவுள்ளி
செம்பருத்தி இலை பூவும் தெற்றிப்பூவும்
ஆரே நீ காரை நீரும் ஆவின் பாலும்
அதினிடை சேர் பூவரசன்பட்டைச்சாறும்
கோரே சேர் சிறு பிள்ளை சதுரவேலிச்சாறு
கொடிய குறுமூலியொடு நீலிச்சாறும்
வாரே நீ வகைக்குச் சாறு உழக்கு ⅟ வாங்கி
வன்மையுடன் கழுதைப்பால் நாழி கூட்டே.

348. கூட்டு நீ பசுவின் நெய் மூன்றுழக்கு
கூசாமல் தேங்காய்ப்பால் ஒருழக்கு
நாட்டே நீ விளக்கெண்ணெய் உழக்கு சேரு
நலமான கடை மருந்தை நாட்டுவேன் கேள்
பாட்டிலே சொன்னபடி மதுரச் சீரம்
பால் கெருடப்பச்சையொடு கார்கோல்
வேட்டிலே யடங்காத கரி" சீரம்
விழாலரிசி கிராம்பு கொட்டம் சாதிக்காயே.

349. சாதிக்காயிலவங்கம் கஸ்தூரி மஞ்சள்

சார்ந்த முக்கடுகிறேடு வசம்பு மல்லி
பாதியெனும் அரிதகியும் சிவதை மோதம்
பண்புடைய சீனப்பா வெள்ளவுள்ளி
ஒத்து சித்தரத்தை யொடு வேம்பாடம் பட்டை
ஓர் கழஞ்சு சாதிலிங்கம் கெந்தம் கூட்டி
மாதுமையாள் சொன்னபடி இருசு பாதி
மகிழ்ந்த சந்தனமும் கறுத்த சூரை

350. சூரையொடு பூலாவும் பேதிதாறும்
சுரபி ரோசனையோடு இடை நேர் கூட்டி
வாரியெனும் முன் சாற்றுலரைத்துக் கொண்டு
வகையுடனே நெய் சாறேடிளக்கிக் கிண்டி
வீரியெனும் தீபம் போலெரித்து மைந்தா
விந்தையெனும் நாதனை உள் அடக்கக் கொண்டு
காரியெனும் மெழுகு பதம் கண்டிறக்கி
காசளவு கொடுக்க இரு மூன்று நேரம்:

351. இருமூன்று நேரமதில் சிகப்பங் கேது
ஈன்றதொரு குழவிகளுக்கு கரப்பனோது
வருமந்த கிரந்தியெங்கே சூலையெங்கே
வாராது படுவ்டு நீர்கள் பொன்னி
மருவிய தோர் வாய்ப்புண்ணும் காதில் பாய்ச்சல்
மைந்தருட மேகமுதல் மூலப்புண்ணும்
கருவான நோய்களெல்லாம் தகர்ந்து போகும்
கை கண்ட கேசரி நெய் கருத்துள்ளோரே.

சிகப்புக்கு சிறியா நங்கை நெய்.

352. கருத்துடனே நெய்யிலொன்று இன்னுங் கேளு
கானில் வளர் நங்கை மாங்காயளவரைத்து
பெருத்த உள்ளி சாறழக்கு நெய்யுழக்கு
பேனியொன்றாய் கலந்து கிண்டி மெழுகில் வார்த்து
சிறுத்த மைந்தர்க் காசிடைதான் அருந்தும் போது
தெறித்துப் போம் சிகப்பதென்ற நோய்களெல்லாம்
அறுத்திருந்த கரப்பனொடு கிரந்தி தீரும்
ஆயுள் மறை தப்பாது அறிவுள்ளோரே.

ம்.

செம்பருத்திநெய்

353. அறிவுள்ளோர்க்கின்றுமொரு நெய்தான் கேளு
அடவான செம்பருத்தி துளசி தெற்றி
பிரிவான மூக்கூற்றி முறத்தி கீழ்காய்
பிலமான சீதேவி அவரி வல்லி
வெறியான புங்குறத்தி செறிய பீளை
விளம்புவேன் கருள்ளி கழுதைவொத்தி
குறியான கோவின் நெய் எரன்டெண்ணெய்
குரும்பைப்பால் இரு சீரம் கரைத்துக் காய்ச்சே.

354. காய்ச்சியே வடித்ததனைக் கொள்ளும் போது
இவ காலு சிகப்பு வகை உதிரரோகம்
வேச்சுதே விஷ பாகம் விசற்பமென்ற
வெகு சுறுக்காம் கிரந்தியொடு செவ்வாற்பென்ன
வீச்சான கெற்பத்தில் எழுந்த மோதம்
வீமனென்னும் சிகப்பு தொகை வெகுண்டே ஓடும்
நாச்சென்ற உபதேசம் வெளிவிடாதே
நாதர்க்கள் தனை வணங்கி மருந்து செய்யே.

பால சிகிற்சை.

பல் திரட்டு.

கபத்துக்கு - தாளக பற்பம்.

கட்டிப்போம் தாளகந்தான் கட்டி வாங்கி
கனமாக ஒரு கலசத்துள்ளே விட்டு
பட்டறவே சாரணையின் இலைச்சாறு முங்க
பாங்காக உளம் விட்டங் கடைத்து மூடி
திட்டமுடன் சிறு தீயாய் எரித்து மைந்தா
சிறப்பாக உருகையிலே கட்டிப்போகும்
வட்டமுடன் பற்பமது வெளுத்துப் போகும்
வருங்கபங்கள் சிலேற்பனங்கள் போகுந்தானே.

வாலைகள் சுரங்களுக்கு கஷாயம்.

போமப்பா அருவனை சிறு காஞ்சோற்றி
புகழ் சீந்தில் சுக்குடனே பற்படாகம்
நாமப்பா திற்பிலியின் மூலந்தானும்
நலமான சிற்தரத்தை கடுக்காய் தோடு

தாமப்பா வலக்கு ஒரு கழஞ்சு வாங்கி

சதைத்துடனே இரு நாழி தன்னிலிட்டு

ஆமப்பா குழக்கியதில் திற்பிலி சூள்

அடவாக இட்டருந்த சுரங்கள் போமே.

வாலே வாதத்துக்கு தயிலம்.

வாலேயுட வாதங்களெல்லாந் தீர

வாத்த (வருந்த) கிறேன் தயிலமென்று - வளமையாக

சீலமுடன் பழந்தேங்காய் ஆறு வாங்கி

திடமாகப் புழிந்துடனே நாழியாக

கோலமுடன் நிம்பத்தின் குருந்த முனி

பிடியாகத்தானெடுத்து இடித்துக் கொண்டு

வேலவனே சரணமென்று கடுகு ரண்டு

பலமது வேம்பிரட சாற்றுலாட்டி

ஆட்டிடவே குரும்பையின் பால் அளந்து விட்டு

அதிருடனே கிண்டியதை அனலே மூட்டிக்

நீட்டிடவே முருவையுண்ணி முதிர் பத்தில்

நினைவாகத்தான் வடித்தள்ளுக் கூட்டு

காட்டிடவே பத்தியந்தான் கடினமாகும்

கைகண்ட வித்தையிது கருத்தாய் பாரு.

பூட்டிடவே மேனியதும் புசும் போக

புரமையென்ற பாலருட வாதமெல்லாம் பறக்கும் பாரே.

வாலே வாதராகூந்தன் குளிகை.

அவனிதனில் வாத ராகூந்தன் அன்பான

அழகு சிறு குளிகையரைக்கக் கேரு

கவனமுடன் நறு நன்றி வசம்பு முத்தம்

கடிய வெங்காரமொடு காயங் கூட்டு

திவனமொடும் மிளகு சுக்கு திற்பலி மூலம்

சிறுக அயமோதகமும் வால் மிளகு

நவனமுற சன்னியுகம் தேவதாரம்

நன்றாக அக்கிரு வெண்பிசினுங் கூட்டே

கூட்டே சிறு தேக்குமல்லி சீரம்

குணமான வாய் விளங்கம் கருஞ்சீரம் குப்பை

நீட்டு நீ வெப்பாலரிசி பாம்புக் கற்டம்

நல்ல கருநாவியொரு வட்டுஞ் சேர்த்து

மூட்டே நீ நாங்குநூவும் முசிறு முட்டை
முறையான கோழி வெண் காரஞ் சேரே
காட்டே நீ எருக்கிலையின் பழுப்பும் பூவும்
சார்வான முருக்கிலையும் முங்கைத்தேலே.

முருங்கைத் தோல் ருத்திர மணி யானைப்பல்லு
முறையான கழச்சித்தோல் கொழிஞ்சி மூலம்
கருக்கு வாயிலையிறேடு முள்ளன் கோணும்
கனத்த புலித்தோலுடனே கம்பிளியுங் கூட்டி
நெருக்கமாய் மயிலிறகு சமஞ்சயொக்க
நேராக சோதனை கொண்ட வாக்கச் சொல்வேன்
பருத்ததோர் தோடை குப்பை மேனி இஞ்சி
பாங்கான நொச்சி தைவ ளையாமே.

ஆமெனவே படர் பருத்தி முலைப்பால் இன்டு
அடவான இசங்கு தூதளை அப்பட்டு
போமே கேள் இவை யொக்க இவைந்து நாளால்
பூதமை பெற அரைத்துருட்டி பழு மட்டாய்
நாமே கேள் நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு
நலமான அநுபானம் அறிந்தங் கூட்டில்
வாமே கேள் பாலருட சுகம் சகல நோயும்
பொல்லாத வலி தரப்பு சன்னி போமே.

சன்னியொடு புறவீச்சு சுரங்கள் மாந்தம்
சார்வான தோஷமுதல் சகல நோய்க்கும்
வன்னியெனும் குடோரி யென்ற வாதாரகூதன்
வலுவான குளிகையிது வளமையாக
சன்னியெனும் சுரமென்றல்
கடிதான அரத்தை குடி நீரிலாட்டு
கன்னியெனும் உள்ளி முலைப்பாலிஞ்சி
குணமாகப் புழிந்த நீர் தன்னிலாட்டே.

நீட்டியே சுக்கு நீரில்
நீங்கிடும பொருமல் வாய்வு
வாட்டியே நெரிஞ்சி தேற்றன்
வலிகளும் கூட்டிக் கொள்ளே

கொள்ள வேசிர நீர் போகும்

கொடியால் தரிப்பு மாறும்

தள்ளும் முக்கடுகு தன்னில்

சாந்தமாம் கபதோஷங்கள்

மள்ளிய உலுவாயுள்ளி

வைத்திடு பிரளி போகும்

அள்ளிய ஓமம் சீரம்

அடவான வில்லை விளாத்தி

விளாத்திநெல்பொரியுங்கூட்டி வகையுடன் அருந்தும்போது

அளத்திய சர்த்தல் தாகம் அகன்றிடும் தின்னமென்று

கனத்திடும் மலத்தை காட்டில் கடுகு ரோகணி சிவந்த

தளத்திடக் கஷாயமிட்டு தாக்கிட மாறிப்போமே.

ஸ்ரீ சாதிலிங்கக் குளிகை.

கோதற சுரங்கள்க் கெல்லாம் கொடுத்தியோர் குளிகைசொல்வேன்

மாதறு லிங்கம் நாலு மதித்த திரிகடுகெட்டு

தீதறு அரத்தை ரண்டு திற்பிலி மூலம் ரண்டு

பாதற பொடித்து நீலி பகர்ந்த சாறு விட்டரைத்தே

அரைத்துடன் முலைப்பாலிஞ்சி அதிலொடு சர்சம்செய்து

கரைத்துடன் கொடுப்பீராகில் காசினியில் சுரங்களெது

நிரைத்திடும் பாலகர்க்கு நீங்கிடும் சுரங்கள் காச்சல்

பருத்ததோர் தோஷம் மாறும் பலபிணியகன்று போமே.

சுர்த்துக்கு பொரிகாரக் குளிகை.

அகன்றுபோம் சுரங்களுக்கு குளிகையொன்று

அன்றகிறேன் பொரிகாரந் நாவிலிங்கம்

களருமிளகுடனோமம் சமனாய்க் கூட்டி

தூளாக்கி முலைப்பாலில் இஞ்சிச்சாற்றில்

மன்று குருவருளால் அரைத்துருட்டி

பயறளவு. உண்டை செய்து நிழலிலுலர்த்தி

சுகன்றற சுரமானத்துக்கு இஞ்சிச்சாற்றில்

ளுனறிடவே அச்சிணத்தில் சுரங்கள் கண்டு போமே.

கும்ப முனிதானுரைத்த வாகடத்தில் கூறினதோர் கஸ்தூரி மார்க்கங்கேளு

இன்பமுடன்பொன் வெள்ளி ருத்திராக்ஷம் யானைப்பால் கலங்கொம்பு பன்றிதேற்றை

அன்புடைய காண்டாமிருகத்தின் கொம்பனோடு அழகுதிரு கிருஷ்ணகொம்பு அஞ்சனக்கல்

வன்னபடைய சித்தரத்தை வால் மிளகு வருவான கற்கடக சிங்கியக்கிறு

அக்கிரு சிறு தேக்கு மல்லி தேற்றான்
அரிதகியும் மயிலிறகும் வடமுங் கூட்டி
பக்கமுடன் உள்ளி இஞ்சி முருங்கை பூவும்
பகர் கொழிஞ்சி நிலவேரும் முங்கைப்பட்டை
வேகமுடன் தும்பை மலர் சமனாய் கூட்டி
வெள்ளை, முலைப்பாலதிலே புழிந்து கொண்டு
கண்டிடவே கன்குஷம் உரைத்து ஊட்டில்
போகுமே சுரதோஷம் சன்னிதானே.

சன்னியொடு புறவீச்சு வலிசுரப்பு
சார்வான சுளியனுடன் கபநீர் கெட்டு
வன்மை பெறுங் கஷாயங்கள் மாத்திரைகள்
வகையான புட்டவியல் குடிநீர் தன்னில்
முன்னுரைத்த கன்குஷமுரைத்துக் கொள்ளில்
மேலான நோய்களெல்லாம் தவர்ந்து போகும்
சொன்ன தொரு வாகடத்தில் பிசகொன்றில்
செர்ணமலை கும்பமுரை [illegible] பகர்ந்ததாமே.

சுரத்துக்கு சந்தனாதி குளிகை.

சந்தனம் முத்தம் கொட்டம் தகரம் நெல்லி மதுரம் மிச்சம்
மிந்திரு வேலி தக்கோல் மிகழ் சீரம் ஏலம் பேதி
கொந்துறு தேற்றான் கொட்டை கொடிய முக்கடுகிந்துப்பு
வந்து சாதி மூன்றும் வளர்ந்த ரோகணியுங் கூட்டே.

கூட்டிட அரத்தை அக்கிரவும்
குணமாம் வகைக்கு மூஞ்சு நிறை
[illegible] நாட்டே இடித்து பொடி செய்து
நலமாம் இளநீர் தோடையிலை
போட்டே சாமம் ரட்டரைத்து
புத்தரியின் சுண்டைக்காயளவு
தாட்டேயுருட்டி நிழலிலுலர்த்தி
தாயின் முலைப்பால் சீரகமே.

சீரகம் இஞ்சி நீரில் சிறந்த நல்குடிநீர் தன்னில்
பார்தனில் பாலகர்க்கு பாய்ச்சிட சுரங்கள் போகும்
நேர் பிறமேகவெப்பு நேரிட்ட கபங்கள் ஒத்த
வாருறு கணைகள் காச்சல் வரும்பல வியாதிபோமே.

போகுமே நெரிஞ்சிதேற்றுன்பொருந்திய கிழாயந்தன்னில்
ஆகுமே நீரிறங்கும் அரத்தையும் மதூரம் மல்லி
தாகுமே முள்நெரிஞ்சி சீரம் தானென்றுய்க் கூட்டி
வேகுமே கருக்கு வெள்ளம் வெந்த நீர் கிழாயத்தூட்டே.

ஊட்டிட தாக சுரம் உடன்போகும் வெறி சுரங்கள்
வாட்டிட் சுரங்களெல்லாம் வகை கண்டு கிழாயத்தூட்டு
பாட்டினில் கும்பர்தாறும் பாடிடும் சந்தஜோதி
நாட்டினில் மதலைகள்க் கெல்லாம் நல்லதோர்க்குளிகை தானே.

கணைக்கு அவரை கஷாயம்.

ஆவரை உழுவாயின்டு அதிதகி அரத்தை மூலம்
மேவிய துளசி வில்வம் மிகுந்த தோர் சுக்கு சிற்ற
மேதாவும் வல்லாரை முத்தம் சார்ந்த நல்சீரகம் கூட்டி
காவியம் கன்னிகுளே கஷாயமிட்டருந்தவாயே.
அருந்திடச்சீனி தேசம் அதிகுரோசினையும் ருத்திராக்ஷம்
மருந்திடக்கலந்து கொண்டு பாலகர்க்கு அருநாள்கொள்ளில்
திருந்திய வெப்பு காச்சல் தீர்ந்திடும் வாலசந்திரன்
உருந்ததொரு கணைகளோடு உற்றதோர் சுரமும் போமே.

கணைக்கு வேறு கஷாயம்.

போகுமே இன்னுமொரு கஷாயஞ் சொல்வேன்
புகழான ஆவரையும் விஷ்ணுகிராந்தி
ஆகுமே வகைக்கு ஒரு பிடியாய்க் கொண்டு
அதிலேயிடு சிறு சீரம் மிளகு இஞ்சி
வேகமுடன் இருநாழி சலத்திலிட்டு
வெற்றியுடனெட்டொன்றுய் குறுக்கிக் காய்ச்சி
பாகமுடன் பாலகர்க்கங்கருந்தும்போது.
பதினெட்டுக்கணை தீரும் பலநோய் போமே.

இன்டு சருவாங்கம்.

இன்டி சங்கு தூதுவளை இசைந்த கண்டங்கத்தரி
புத்தகம் என். 2 பார்க்க.

சீதமேல் வாதத்துக்குத் தயிலம்.

வாதமடக்கி நொச்சி வளர்தோடை கண்டங்கர்ரி
சீதளா தளை இசங்கு சிறுமேனி வேளைதாளை
கோதற இஞ்சி இன்டு குழிமீன்டான் முருங்கைப்பட்டை
வேதரு அப்பட்டிரேடு வேலியின பருத்தி நின்பம்

வாதற நின்பமே முருக்கெருக்கு நிசதமதாம் மாவிலங்கு வகைக்கு
தளம்பெற பிடியோரொன்று 'சதைக்கிடித்தெடு சாருள்ளி
க்ளம்பெற நிறையில் பாதி விதைத்ததில் கடுகு நிம்பெண்ணெய்நாழி கூட்டி
நதைத்தபடி கலந்து விட்டுக் கொண்டு பின்னும் நாட்டுவேநப்பா நயம்பெற
அறிந்து கேளே.

கேளே திரிகடுகு திரிசாதி கிளரும் மதூரம் திறிபலையும்
ஆளே தேக்கு வால் மிளகு அதிகக் கிரிசாத்தானதுவும்
நாளே லிங்கம் தாரமுடன் நலமாம் பீலிகரும்புடமும்
தூளே வெள்ளைக்குந்திரிக்கம் தூடமாம் கயறு சிங்கியுமே.

சிங்கி சாத்திர பேதியுடன் சிறுக வலம்புரி அக்கிறுவும்
அங்கும் நிலவேர் மூஞ்சிர் அனில் அடவாம் ரேர்களி குழியானை
பொங்கும் சாரம் அரத்தை கொட்டம் பொருந்தும் காயம் வாய்விளங்கம்
எங்கும் சோமசப்புடனே எடு நீயுள்ளி இவை சேரே.

சேரே முசிறு அண்டமுடன் சிறு நாகத்தின் கண்டமதும்
பாரே வகைக்குக் கழஞ்சொன்று பண்பாய் பொடித்தங்கதில் காய்ச்சி
தூரே இருபது ஐ சிற்றண்டம் தொகை சேர் தயிலமது கூட்டி
சேரே சாறும் என்னெயொடு கோழிக் குடலும் ரெத்தமுமே

ரெத்தமுங் கலந்து கொண்டு இகமுடன் அனலூட்டி
பருத்தமாம் தயிலம் தன்னை பண்புடன் வடித்துக் கொள்ள
வருத்தமாஞ் சன்னி தோஉஷம் வரும் பிறவிச்சு ஈளை
துரத்திடும் சுளியன் தொந்தம் சீதமும் தொலைந்து போமே.

மூர்ச்சைக்கும், சுரத்துக்கும், சன்னிக்கும், தயிலம்.

ஒழிந்திடவே சன்னியொடு சுரங்கள் தீர
உண்மையுடன் தயிலமொன்று புகலக் கேரு
கழிந்திடவே தோடை நொச்சி கண்டங்காரி
கடிய இஞ்டு ஊ நவளை இசங்குமேனி
வழிந்திடவே வழிநதிடவே தைவளைபருத்தி தாளும்
வன்முருங்கை முள் முருங்கை இஞ்சி தானும்
ஒழிந்திடவே எடுத்துச்சாறு உழக்கு வாங்கி
முதிய நன்பெண்ணெயது படிதான் சேரே.

சேரே நீ வெள்ளுள்ளிகாயம் சனிறையகமும் சிறுபுழுகும் வசம்பும் கூட்டி

பாரே நீ அரைத்தெடுத்து கலக்கிக்கொண்டு பண்பான கரும்புட்டமும் மஞ்சைப் பிலி

ஊரே நீ வடக்கயிறு சமலுயக் கூட்டி உற்றகரிகலந்ததில்பின்பாகம்கேரு

நேரே நீ சுந்தரியொடு அனிறும் தெண்டில் நீ நிறம்பார்த்துக் கொத்தியதில்கூடத்தாக்கே.

தாக்கிடவே அண்டைமது மூன்று பத்து
சரியாகத் தயிலமெடுத்ததிலே சேர்த்து
தா க்கிடவே பாகமதாய் கிண்டி காய்ச்சி .
துள்ளிவரும் பாகமதில் கோழி ரெத்தம்
நீக்கிடவே குடலோடு கலந்து கிண்டி
நிமிஷ த்தில் குடல் முறியும் பருவந்தன்னில்
வாக்கிடவே வடித்துடனே உள்ருக் கூட்டி
வலுவாகப் பூசிடவே சன்னி போச்சே.

போச்சப்பா சன்னியொடு வலிகள் சீதம்
பொல்லாத கபசுரப்பு இளைப்பு மூர்ச்சை
ஆச்சப்பா குடோர முதல் வெட்டு வாதம்
அடவாகத் ஸ்ரீமென்று அருளிச்செய்த
மூச்சப்பா மயங்கினதோர் மூர்ச்சைக் கெல்லாம்
முறையாகத் தயிலமதை அனத்திப் பூச
வாச்சப்பா தயிலம் முறையாய் செய்வாய்
வாகடமோ பிசகாது வழி தப்பாதே.

மூள்ளெலித் தயிலம்

போமென்ற பாலகர்க்குத் தயிலமொன்று
புகலுவேன் தைவளை குப்பை மேனி
தாமென்ற அப்பட்டு செங்கு தோடை/
தனித்த இண்டு படர் பருத்தி கிலகிலுப்பை
காமென்ற அவரியிலை குழியின் மீண்டான்
கனகண்டங் கத்திரியும் வல்லாரை வில்லை
நாமென்ற இருநொச்சி துளசி ரண்டும்
நலமான எருக்கு முருக்கிலையும், கூட்டே.

கூட்டே நீ கழச்சி கூந்தல் சாறும்
மூமான நாகவல்லி நிம்பத்தோடும்
நாட்டே நீ வகை வகைக்கு சாறழக்கு

நலமான சுந்தரிதெண்டிலனில் சிற்றரட்டம்
காட்டே நீ நில வேரும் குழிப்பில் யானை
கம்பிளியும் மயிலிறகும் வடமும் சேரே
ஊட்டே நீ பரிக்குழம்பு முசலின் காட்டம்
ரூக்ஷ மதாம் பன்றி நகம் கலங்கொம்பு சேரே.

சேரே நீ பெருங்கறையான் நிலவேர் ரண்டும்
சேர்த்திடு நீ ஆழாக்கு சரியதாக
பாரே நீ [illegible] நின்பெண்ணெய் நாழிகூட்டி
நன்மை பய்ய சிறு கண்டமுமே கரியோடொப்பம்
நாரே நீ அண்டமதைத் தயிலம் வாங்கி
நன்றாக ஒருழக்கு கலந்து பின்னும்
காரே நீக் கரும்பிடைத்தான் ஒன்றின் ரெத்தம்
கலந்ததில் குடல் நீரும் சேர்நவிலுவோமே..

நவிலுவேன் அதிமதுரம் வசம்பு குக்கில்
நாயகம் நன்கடுகரத்தை திரிகடுகோடுள்ளி
திகழுவேன் மரமஞ்சள் உலுவாய் திற்பிலி.
தியலான சிவதை அக்கிருகர் கடக்கசிங்கி
பகருவேன் பச்சவன் பழுக்காய்தாலும்
பூமியிலே நண்டிருட கொழுப்பு கூட்டி.
உகலுவேன் முள்ளெலியைக் கருக்கிப் போட்டு.
உற்றதொரு வால்மிளகு தேக்கு கொட்டம்.

கொட்டமொடு இலவங்கம் மருந்தோடொக்க
கொடியதொரு முருங்கையின் சாற்றுலாட்டி
திட்டமுடன் என்ணெயிலே கலந்து கொண்டு
திடமாகத் தீயெரித்து முறுக வாங்கி
மட்டான சிறு பாலகர்க்கு சகல நோய்க்கும்
துட்டபிணி சிலேற்பனம் முதல் சுரதோஷங்கள்
அருளான தைலம் விரலதிலே தொட்டு
அழகான பாலகர்க்கு நாவில் தீட்டு
மெருளான சிரசு பந்தப்புடம்புகை கால்விசை தடவு
தீரும் நோய் விளம்பக்கேளு
தருளான குழித்தோஷம் திரைத்தோஷம்
நிழல் தோஷம் பறவைத் தோஷம்
முருளான பேய்த்தோஷம் பக்ஷித் தோஷம்
உற்ற புள்ளுத் தோஷம கால் மூன்றும் போமே.

மூன்றுடனே சிரதோஷம் இருபத்தொன்றும்

முசல் வலிப்பு சன்னி பதிமூன்றுங் கூடி

தோன்றுகின்ற சிலேற்பனந்தான் இருபத்தொன்றும்

துரப்பிருமல் விஷ விலாச்சுழியன் தீரும்

கூன்றுதலாம் கபக்கட்டு குவலைக்கட்டு

குத்திருமல் வெப்புடனே குளிர்ச்சை தீரும்

போற்றொரு ஈரல்நோய் எல்லாம் தீரும்

புகழான முள்ளெலியின் தயிலந்தானே.

மேகசுரம் எல்லாத்துக்கும் கஷாயம்.

மேகசுரம் போவதற்கு கஷாயமொன்று

விதமான முந்திரி ரர்மிச்சு மல்லி

ஆகமாய் குறுந்தொட்டி அமிர்து சீரம்

அழகான பற்பாடாகம் வில்லை வேரும்

ஊகமுடன் இருவேலி விஷ்ணு கிராந்தி

உண்மையாய் சந்தனம் அரத்தை மூலம்

வேகமுள்ள அறுகன் வேர் முத்தக் காசு

வேண்டு சிறு பயறு சுக்கு மதுரம் பேதி

பேதியுடனே சரிசமன் எட்டொன்றுக்கு

புதல் வருகக் குந்திடவே தீரும் நோய் கேள்

வாதுடனே உஷ்ண சுரம் தாக சுரம்

வந்ததொரு மேகசுரம் அஸ்திச் சூடு

தாதுடனே சலக்கடுப்பு சாந்தமாகும்

தவறிவிடும் பித்த சுரம் தவர்ந்து போகும்.

மாறுடனே உரைத்த மொழி பிசகிடாது

மலையாதோர் இச்சாதி கஷாயந்தானே.

கிரந்தி, கரப்பன், சிரங்கு பொரி

தேமல் இவைகளுக்குப் பொடி.

சுரசம் கிரந்தி தீர கடிய முக்கில் பலமொன்று வாசமது

தான் பலங்காலாம் வகையாய் திற்பிலி பலமொன்று பேதம்

சீனப்பாவொன்று பெருகும் சீரம் கருஞ்சீரம். ஓசையறவே

சிறு நாகம் உகந்த கிராம்பு அமுக்கூரம். அமுக்கூரத்தோடிவை

சமனும் ஆக நிறைசேர் பலங்காலாய் நடுக்கும் சிவனார் நல்

கடுக்காய் நாரும் பலமது இருகால்தான் தவர்க்க இடித்துப் .

பொடியாக்கி தானே கொசுவின் தேனிலுண்ண திவர்க்கத்துடனே
காச களை திரட்டும் கிரந்தி இரு நான்கும் நா்ன்கும் சூலை
சொறி சிரங்கு நல்ல குட்டம் அரையாப்பு பங்கும் மூலபவுந்
திரமும் பகர்ந்த கரப்பன் எட்டெட்டும் ஓங்கும் ரெத்த தோக்ஷ
முதல் ஓடும் சில்விக்ஷம் பொரி தேமல் தூங்கும் இளைப்பு
களை முதல் க்ஷயரம் நீங்கும் சூக்ஷமிதே.

தீரை தீர. கஷாயம்.

நாகவேப்பின் தோல் கச்சோலம் நவிலும் தாரம் ஒரொன்று
கூவும் வகைக்கு கழஞ்சு ரண்டு குதிக்கப்புரசின்வித்தஞ்சும்
மேவும் கஷாயம் வைத்தருந்த விழுமேகிருமி இவையெல்லாம்
தாவும் லவணக்கஞ்சி கொள்ள தலையும் பேதி பிடித்திடுமே.

சிகப்பில் சன்னிக்குத் தயிலம்.

ஒழிந்து போம் நின்பெண்ணெய் உழக்கு வாங்கி
உற்ற துடிகாயமொடு உள்ளி இந்து
கழிந்து போம் தும்பை மலர் ரண்டுங் கூட்டி
களக்கவே தானரைத்துக் கரைத்துக கொண்டு
வழிந்து போம் இஞ்சி லைச்சாறுழக்கு கூட்டி
வடித்தருந்த சிகப்பு சன்னி வராதென்ன
ஒழிந்ததொரு வயிறு கடியும் தலையுருட்டல்
உற்ற பிற வீச்சு வலி சிலேற்பம் போமே.

பால வாத ராக்ஷதன் குளிகை.

அறைகிறேன் அதிமதுரம் கொட்டந்தானும்
அப்பலே திரிகடுகு இந்துப்பேலம்
குறைகிறேன் திரிசாதி கடுகு ரோஹிணி
குணமான அரத்தையோடு அக்கிரு தேற்றுன்
துறையான வெளிச்சிப் பீசின் வகையோரொன்று
சுகமாக கழஞ்சு நிறை சமனாய் கூட்டி
நிறைய வேதந்ததானுரைத்த பாம்பு காண்டம்
நலமான முசிறு முட்டை நிலவேர் தானே.

தானு மயிலிறகு வடமும் கம்பளி
சார்வாக சுட்ட கரி கலந்து கொண்டு
மானுக இடித்து வடிகொண்டு மைந்தா
மாட்டியரை தோடையுட சாற்றுலாட்டி

ஊனை தூதளத்தின் காய்போலுருட்டி
நிழ்லுலர்த்தியங்கே கொடுத்தப்பாரு
வானை சுரங்களொடு வெப்பு கிராணி
மர்றிப்போம் கலை இருமல் மாறிப்போமே.

மாறிப்போம் சன்னி சுரம் இஞ்சி யுள்ளி
மகத்தான சித்தரத்தை ஏலந்தன்னில்
மீறிவருஞ் சுழியனுக்கு அரத்தை இஞ்சி
இதமான மதுரம் திற்பிலி குழாய்த்தோடும்
கூறிவரும் அழச்சலுக்கு சீரம் முத்தம்
கூமான மாதளையின் பிஞ்சி கஷாயம்
ஏறிவரும் இருமலுக்கு சிறு தேனிலாட்டு
எழுந்து வரும் வாயுவுக்கு இன்னுங் கேளே.

கேளே நீ வெந்தயமும் வெளுத்தவுள்ளி கிழாயம்
கெட்ட மாந்தமது தொடர்ந்ததானால்
நாளே நீ மாத்தமிதின் கிழாயத்தூட்டு
நலமாகும் வெகு நோய்கள் தீரலாகும்
வாளே நீ அனுபானம் அறிந்து செய்தால்
வாராத பிணியனைத்தும் மருண்டு போகும்
கோளே நீ வராமல் சிறு வாதா ராக்ஷதன்
கூறினேன் உலகமதில் சேய்க்குத்தானே.

தயிலம்.

உரைக்கவே இன்றுமொரு தயிலம் சொல்வேன்
உமையவள்க்கு உரைத்தபடி உலகத்தோர்க்கு
பொறுதியுடன் வல்லாரை சிறு நெரிஞ்சி
புகழான வில் லையிலை இசங்கு கையான்
சுருதியுடன் தோடையிலை மேனி வேளை .
சொல் பெரிய தும்பை ரண்டு குழியில் மீண்டான்
கருதியுடன் விஷ்ணு வென்ற மூலிதானும்
கருத்தான அடிவணங்கி பருத்திதானும்
தானை செருப்படி தூதளை நெரிஞ்சி
தளை கண்டங்காரி நொச்சி பேய்பீர்க்கு
ஊனை செஞ்செட்டி வேரும் இண்டு
உரைத்தபடி மாவிலங்கு முருங்கைப்பட்டை
தேனை எருக்கு முருக்கிலையும் பட்டை

தெளிந்த தெளிவான தழுதாழை சங்கு புஷ்பம்
கோனை சாறு வகை சரியாய் கூட்டி
கொடிய நின்பெண்ணெய்படி தானென்றே.

ஒன்றே முலைப்பால் தானிரட்டி
இடு நீ நிலவேர் முசிறு முட்டை
நன்றே சொல்வேன் பெருங்கறையான்
நல்ல பாம்புக் கண்டமறும்
பன்றும் சுந்தரி அணிலொன்று
பழைய கம்பளி கரியதுவும்
வன்றும் பீலி வடமுடனே
வளைசேர் கோழி யொன்றதுவே.

ஆமே சொல்வேன் கடைமருந்து
அடவாம் திரிகடுகு திரிசாதி
நாமே மதுரம் சிறு தேக்கு
நல்ல திரிபலை திரிசாது
கோமே மிளகு சூந்திரிக்கம்
கொள்ளும் லிங்கம் தாரமுடன்
வேமே பேதி சிங்கியுடன்
வலம்புரி கொட்டம் சித்தரத்தை

அரத்தை வாய் விளங்கம் காயமிந்து
அட்வே சாரம் கடுரோணி
பெருத்த ரோசனை புனுகுடனே
பேணி அடுத்த அக்கிருவும்
நீத்து வகைக்கு கழஞ்சொன்று
நெருங்கவே இடித்துப் பொடியாக்கி
பருத்த முன் சாறு விட்டரைத்து
பண்பாய் என்ணெயுடன் கலந்து
கலந்தே முலைப்பால் மருந்தெல்லாம்
கடிய பாண்டமதில் தாக்கி
உலந்தே சுந்தரி அணில் கொத்தி
உடனே கோழி குடல் ரெத்தம்
மலந்தே வகையுடன் நொறுக்கி
மணமாய் கலந்து சாறேடே
நலந்தே கிண்டித்தான் காய்ச்சு
நல்ல பதத்தில் வடித்திடவே.

வடித்தயிலம் பாலகருக்கு உள்கொடுத்து உடலிலிடு

கடுத்த சுரங்கள் சன்னி முதல் கானதோடும் வலிவெட்டு
படுத்த இக்கிர் மூர்ச்சையும் பரதாபங்களெல்லாம்
உடனே தீரும் இரை மாந்தம் உடலில் சீதம் சுழியதும்

சீதமுடனே தீருமென்று சிவனர் தேவிக்குபதேசம்
வேதமுடனே கைந்தர்க்கு வெளியாய்ச்சொன்ன மந்திரத்தை
காதிலேயார் சீர் செய்கருக்கு கருத்தாய் உரைத்தோம் காரிழையே.

சிகப்பு தீர நெய்.

பெயரான சித்தர்கள் எல்லாம் சேர்ந்து பெருகவே ஒருகிருதம் பெல
மாய்ப் பேச பாராத கமுதைலொத்தி சாறுழக்கு பாருமே
ஏரண்டெண்ணெய் ஈருழக்கு சேராத குப்பிச்சாறு தெற்றி செம்
பொன் சேர்ந்த பூவரசு செம்பருத்தி தாறும் கேராத வெள்ள
றுகும் ஈரவுள்ளி கொண்டு விடு ஒருழக்கு குணமதாய் தானே.

தானன சிவன் வேம்புச்சாறுழக்கு தக்கதேங்காய் பாலுழக்கு சரியதாக
மானன சீனப்பா சிவந்த சூரை மார்க்கமுடன் திரிகடுகு ஏலம் புரம்
ஆனன கருஞ்சீரம் மதுரம் புலா உள்ள ரெத்த சந்தனமும் உறுதியாக
வானன வகைக்கு இடை சமனய் வாங்கி வடிய அரைத்து எண்ணெயிலே
கலந்து காய்ச்சே.

சிகப்பு கரப்பன் சூலை கிரந்திக்கும் வேப்பின்பட்டை தயிலம்.

சொல்லுவேன் வேப்பினுட பட்டை தாறும் தொகையாக இருநான்கு
பலம் நொறுக்கி

அல்லவே பதினறு பலந்தானப்பு
அதில் விட்டு எட்டொன்றாய் குறுக்கி காய்ச்சி
நல்லவே ஏலமொடு கரிய சீர் கார்கோல்
நிலேயான மஞ்சட்டி மிளகு கொட்டம்
மல்லவே வகைக்கு இரு கழஞ்சு வாங்கி
மகத்தான உருக்கெண்ணெய் படிதான் வாரே.

வாரமுடன் கஷாயமதில் கலந்து காய்ச்சி
வடித்திடு நீ மணல் பத்தில் வடிவாம் மைந்தா
தீராத சிகப்பு தொகை கரப்பன் தீரும்
குணத்து வரும் சூலையொடு குட்டந்தீரும்

ஓராத விரணங்கள் பொடிப்பு நல்ல
ஓய்ந்த செங்கிரந்தி கருங்கிரந்தி போகும்
தூராத சுடரொளி போல் சூக்ஷம் சொன்னேன்
சுத்த மாங்குளிகை யொன்று கூறக்கேளே.

கரப்பனுக்கு நெய்.

அதிமதுரம் கெருடப் பச்சை கொத்தமல்லி
ஆய்ந்த கருஞ்சீரகமும் அளவாய் ஓமம்
விதிபுகழும் விழாலரிசி சுக்கு ஏலம்
மிகுந்த குடகப் பாலரிசி மிளகு சீரம்
பதிபுகழும் திற்பலியும் வசம்பு வங்கம்
பகர் சிவதை உள்ளி கழஞ்சொன்றங்கே
கெதியாவின் நெய் நாழியதனில் சேர்த்து
கிட்டியதை மூட்டியனல் வடித்திடாயே
வடித்து ஒரு காசிடை தான் சிறுவருக்கு
வளமாகக் கொடுத்துடம்பில் பூசு வீதம்
வெடித்திருந்த செங்கரப்பன் கடி விஷந்தான
வேரிளகும் கொத்துங் கொள்ளி சொறி கரப்பன்
கூடுத்துடம்பில் பூசி வர பத்துநாள்தான்
குழலியுட மேனிப்புண்ணும் கூறினேன் கேள்
படிதனிலே குழவி தாய் பத்தியங்கள்
பழங்கஞ்சி குளிர்ந்த சலம் குளியும் மாற்றே

புட்டவியல்.

சொல்லுவேன் இன்னுமொரு புட்டவியல்
சுகமாக பிணி மலதும் தீர வேண்டி
நல்லதோர் முருக்குடனே முருங்கைபட்டை
நலமான முசுட்டை வள்ளி வெள்ளவுள்ளி
தல்லவே படர்பருத்தி துளசி தும்பை
தயவான கத்திரியும் செங்கு தோடை
தல்லவே தூதளையும் உளிஞை நொச்சி
சுகமான அப்பட்டுக் குருந்து இண்டு.

குருந்திஞெடு முத்தம் இஞ்சி நிலவேர் முட்டை
சுண்டமாத ஊளை இலையும் வில்வஞ் சேரு
பகிந்திளிரும் விஷ்ணுக் கிராந்தி குறிஞ்சில் மீண்டான்

பாங்குடனே கொழிஞ்சி வேர் சமனரிந்தெடுத்து
மருந்து வகை சித்தரத்தை திரிகடுகு மதுரம் மூலம்
முலையாள் பாலை விட்ட வித்துக் கொண்டு
வருந்த வித்துப் புழிந்த நீர்தனிலே மைந்தா
வாங்கியிதைக் கண்டூஷம் தயிலம் மாத்திரை

மாத்திரைகள் பீலிவடம் சுட்டருந்தும் மோது
வருந்தான வாலை சுரம் முப்பதெட்டும் போச்சு
சூத்திரமாய் வந்ததொரு கழிச்சல் கிராணி
சுமையுடனே சுழியனொடு மாந்த தோஷம்
கோத்திரமாய்- சன்னி வகை கெதிகெட்டோடும்
கொடிதான அத்திசுரம் கணைகள் வெப்பு
நேத்திரமாய் பறக்குமப்பா தோஷம் மூர்ச்சை
நிசமாகத் தீருமென்று நிகழ்த்தினேனே.

முள்ளெளித் தயிலம்.

செய்யென்ற பாலகர்க்கு இளைப்பதற்கு
செப்புகிறேன் முள்ளெலியின் தயிலங் கேளு
பேய் பிசுக்கு, பெரு நெரிஞ்சி வேளை நீ மீண்டின்
பெருந்தும்பை மாவிலங்கு சிறு நெரிஞ்சி
இஞ்சி வல்லாரை வில்லை தோடை
இண்டு நொச்சி கத்திரியும் கையான்மேனி
ஆய தும்பை புள்ளடியும் சித்திரப்பாலை
அப்பட்டு செருப்படியும் பொன்னெரிஞ்சி

நெரிஞ்சியொடு செஞ்சட்டி இசங்கு உள்ளி
நேர்த்தானித் தூதுவளை இலையினோடு
சேர்ந்தெடுப்பாய் வகைக்குச் சாறுழாக்கு ஒப்பம்
சிறப்பான முசிறண்டம் கோழி ரெத்தம்
பரிந்தெடுப்பாய் பெருங்குறையான் அவ்வீதந்தான்
பக்குவமாய் குழியானை மயிலின் பீலி
அரிந்திடுவாய் வடக்கயிறும் முள்ளெலியும்
அணில், புடமும் நச்செலி நிலவேர் கண்டம்
கண்டமுடன் கோழி நிணம் சரியாய் சேர்த்து
கழற்றுவேன் கடை சரக்கு அரத்தை வெப்பால்
வன்வாலுமுவாய் மல்லி..............தாரம்

வால்மிளகு தக்கோலம் கிராம்பு லவங்கம்
கண்ட மக்கிரு திற்பிலி மூலமதாய்
கடுக சிங்கியோடு பழுக்காய் கொட்டம்
பண்டுலவாய் வகை வகைக்கு கழஞ்சு மூன்று
ஆட்டியே மூன் சாறு விட்டு ஆட்டே

ஆட்டியரைத்தெடுத்து கலக்கிச்சாறும்
அப்பனே நின்பெண்ணெய் படிதான் ரண்டு
தாட்டிகமாய் அடுப்பேற்றி பத்தில் வெந்து
கருகுடல் முறிபத்தில் வெந்து வைத்து
காட்டியே தீபமொடு தூயம் செய்து
களிப்புடனே காசிடைதான் பாலர்க்கீயே
நாட்டிலே அநுபானம் அறிந்து தாக்கு
நலங்கெட்ட சன்னி சுரம் சேற்பம் போமே.

சிர நீர் குணம்.

நீரது சிரசிலேற்றி நொய்தாய் இருமி காட்டி
சேருமே அய்யந்தானும் சென்று கீழிறங்கி நின்று
கோரிய விலாவுரண்டும் கொதித்தயயம் தூங்கிக் கொள்ளும்
பாருமே எச்சியென்றும் பற்றும் விலாச்சுழியனென்றே.

என்றதோராய்யந்தானும் எழும்பிடும் சவ்வு போல
நின்றது பற்றிக் கொண்டு நீரொடு கபமும் வாய்க்கும்
மூன்று மூச்செறிதல் முட்டு முக்கொடு சுரமுங் காட்டி

கால் கரப்பனுக்கு தொட்டிடத் தயிலம்.

பாலகர்க்கு காலில் வரும் கரப்பன் தீர
பாங்கான தயிலமொன்று பகரக் கேளு
சீலமுடன் சிறு குருக்கின் வித்திரேடு
சிந்தை கஸ்தூரியெனும் மஞ்சள் தானும்
கோலமுடன் இடித்ததனை உருக்கு நெய்யில்
கூறுகக் கலந்து ரெவியில் வைத்து
வேலவனே சரணமென்று செய் கால்தன்னில்
விதமாக பூசி வரகரப்பன் போமே.

பாலவாதத்துக்கு ஆயிலியம் பட்டைத் தயிலம்.

களபீசம் - சென்னக்காய் விதை.

நெடியமால் உலகில் சொன்ன நிசமான தயிலமொன்று
துடிகனவாயில் யத்தோல் தூக்கு நீ பலந்தான் பத்து
துடிபுக்குமணி ரண்டு குறுக்சி நாழுயாக்
வடிய நல்லெண்ணெய் நின்பத்தயிலம் ஓர் படியதாக
வடிவுறக் கலந்து கொண்டு விளம்புவேன் மருந்து கேளே.

கேளப்பா கசகசா குருந்து நிம்பம்
கெண பீசம் கருஞ்சூரை கடுகு மூன்றும்
நாளப்பா தேங்காய்ப்பால் தன்னிலிட்டு
நன்றாக அரைத்துருட்டி கலக்கிக் காய்ச்சி
மாளப்பா மூன்றும் நாள் மணல் பத்தில்
மசியது போலாக முறுகக் கண்டால்
வேளப்பா வடித்து தலைமெழுகும் போது
வெகுநோய்கள் ஓடுகிற விபரங்கேளே.

விபரமுடன் வாதங்கள் எணாற்பதும் போம்
வென்னீரில் முழுகி வர சூலை போகும்
மாவரமென்ற நரம்பிசிகள் நடுக்கு வலி விரை
திமிர்ப்புடனே விறைப்பும்
காவரமென்ன கணை வாதம் இரு நான்கும்
காலிளக்கும் ஓடிவிடும் விதை வீக்கந் தீரும்
கமல்குரு அருளினாலே.

விஷ சுர மாத்திரை.

போகுமே விஷ சுரத்திற்கு இன்னுமொன்று
புகழான காந்தமொடு உருக்கிரும்பு
ஆகுமே கழஞ்சி ரண்டு திரிகடுகு
அழகான சித்தரத்தை நறுக்கு மூலம்
வேகுமே வெள்ளுள்ளி லிங்கம் தாரம்
வெகு சுருக்காம் திரிபலையும் வாளம் ரோணி
பாகுமே கெருடப் பச்சை குலந்தாமும்
பகருவாய் வகைக்கு ஒரு கழஞ்சு வாங்கே.

வாங்கிய மருந்ததனை சுத்தி செய்து
வரிசையுடனிடித்து வடிகெட்டிக் கொண்டு
நீக்கியே உருக்கிரும்பு சுத்தி மார்க்கம்
நிகழ்த்துவேன் பொற்றலைக் கையான் சாற்றில்

தூக்கியே நில்லாதே மருந்தையெல்லாம்
சூக்ஷமதாய் குழிந்தம்மி தன்னிலாட்டி
ஓங்கியே தேசிப் பழச்சாறு சாமமொன்று
உண்மையாய் அரைத்த பின்பு உரைக்கக் கேளே

கேளப்பா தோடைச்சாறு சாமம் ரண்டு
கேடில்லாதரைத்துருட்டி மிளகு போலெ
வாளப்பா நிழலிலுலர்த்தி மைந்தருக்குத்தான்
வரிசையாய் அநுபானம் வைத்தூட்டு
மாளப்பா மாறிப்போம் விஷசுரங்கள்
மகத்தான சன்னி வலி சுழி துரப்பு
வேள்ப்பா பால சுரம் எல்லாம் தீரும்
பைங்கொடியே இன்னமொன்று பகருவேனே.

குழி மீண்டான் தயிலம்.

குழந்தைகளுக்கு கபரோகம் சிலேற்பந்தீர
குணமான தயிலமது மீட்டான் வேளை
அளந்தவரி முருக்கு நொச்சி தும்பை மேனி
அப்பட்டு தூதுவளை ஆடாதோடை
தளந்தும்பை பேய் பிசுக்கு கண்டங்கத்திரி
கருவேப்பு உத்தமதாளி இண்டு இசங்கு இஞ்சி
வளந்த தூதளம் பழும் முசிறு முட்டை
வகைக்கு இடி சாறுவகை உழக்குதானே.

உழக்குதான் மேல் மருந்து வசம்பு உள்ளி
ஓமம் மஞ்சள் சிறுதேக்கு அரத்தி சிங்கி
உளக்கலிந்து திற்பிலியும் தரங்கொட்டம்
வாலுளுவாய் வலம்புரிக்காய் வட்டும் பிலி
தளக்கான வால் மிளகு திப்பிலி மூலம்
சனிகுயகம் அக்கிரு நிலவேர் கண்டம்
பளக்கான கரும்புடமும் வகை வகைக்கு
பரிவாகக் கழஞ்சொன்று பொடித்துத் தூளே.

தூளாக்கி வேப்பெண்ணெய் நாழி தன்னில்
சூக்ஷமாய் முன் சாறும் முயலின் ரெத்தம்
ஆழாக்கு அளிலொன்று எலிதானென்று

அரூங் கோழி குடல் ரெத்தம் முள்ளெலியுமொன்று
வாளான அடுப்பேற்றி எரித்து வற்றி
வார்குகுடல் முறிபதம் வடித்துக் கொண்டு
தாளாக நோய்களுக்கு இஞ்சி நீரில்
தாக்கிடவே காசிடைதான் சாற்றக் கேளே.

சாற்றக் கேள் எச்சியொடு இருமல் எய்ப்பு
சன்னுமடா பொருமல் கபம் இளைப்பு ஈளை
வாற்றக் கேள் சிலேற்பமுடன் குவளை கெட்டு
வாங்கு மந்த் சுழியனொடு வலிகள் சன்னி
மாற்றிவிடும் பாலர் சுரம் முப்பத்தி ஆறும்
வாத வகையான வகை கபமெல்லாந் தீரும்
ஆற்றுமே குழி மீண்டான் தயிலம் சொன்னேம்
அகஸ்தீசர் குருநூல் ஐந்நூறு முற்றே.

கோரங்கிழங்கு கஷாயம்.

கோரங்கிழங்கு திரிசாதி கொடிப்ப விடயம் தூதுசுக்கு
ஆரம்பெரிய கருவாயும் அடவாம் கரிய பலைநெட்டு
சீரகத்துடனே கொத்தமல்லி சிறு மாவிரையும் மாதளையும்
காரஞ்சுண்டை வற்றலுடன் கடு உலுவாய் அயமோதம்

மோதத்துடனே நெல்லிக்காய் ஒன்றாய் வெதுப்பி கஷாயமிட்டு
பாதக்குடி நீர்தானருந்தில் பறக்கும் கிராணி அதிசாரம்
நீதக்கழிச்சல் வயிறூளைவு நீங்கும் கடுப்பு உளைச்சல் முதல்
வேதப்படி கீரி முதல் வெகு நோய் போகும் கண்டீரே.

முப்பிறை சுமைக்கு முருக எண்ணெய்.

மதுரம் காந்தம் தாரம் மஞ்சள் திற்பிலி கிராம்பு
சதுரமாம் கருஞ்சீரம் ஓமம் சனியைகம் கடுசாம்பிராணி
முதுமுசலெலியின் காட்டம் மிருசு சீரேமுங் கொண்டு
நிதானமாய் நகரச்சாற்றிலரைத்து நீ கலக்கிக் கொள்ளே.

அரைத்ததைக் கலக்கி நின்றாய் அனலிட்டு குரும்பை நெய்யில்
வரி/திடப்பத்தில் வாங்கி மைந்தருக்குத் தலையில் பொத்தில்
இருந்த முப்பிறையின் தோஷம் இருமலோடிளைப்பு காச்சல்
/ உரைத்ததோர் தாப்பு கக்கல் ஓடிடும் காசம்தானே.

மாதளாதி குளிகை.

தாவென்ற தரணிமீதில் மதலைகருக்கு
        சாற்றுகிறேன் வைத்தியரே தயவாய் கேளும்
தேனென்ற மாதனைதான் சமூல மைந்தும்
        செப்புகிறேன் வல்லாரை ருத்தக்காசு
வாவென்ற பத்திரியும் கிராம்பு சுக்கு
        வளர் ஓமம் குரோசாணி மருதம் பட்டை
ஏனென்ற கருவேலம் பிசிறும் கஞ்சா
        இந்துப்பு தான்றிக்காய் ஏலங் கூட்டே.

கூட்டுவாய் அபிடனே சந்தம் ரண்டும்
        குணமான அதிவிடையந்தானும்
நாட்டுவாய் இவை வகை சேர் கழஞ்சி ஒன்று
        நலமான காந்தமது கழஞ்சி ரண்டு
மாட்டுவாய் ஆட்டின்பால் தன்னலாட்டி
        மைந்தனே எழுசாமம் அரைத்த பின்பு
தீட்டுவாய் குளிகைதனை உருந்து போலெ
        திரட்டியே உருட்டியதை நிழலிலுலர்த்திதே.

உலர்த்தியே குளிகைதனை மாதளம் சாற்றில்
        உத்தமம் மூன்று பொழுதுன் பீராகில்
கனைத்துவரும் வயிற்றளைச்சல் பொருமல் வாந்தி
        கழிச்சலுடன் கிராணி அதிசாரம் வெப்பு
புனைத்து வரும் சளிமாந்தம் கடுப்புமூலம்
        பொல்லாத கனை காச்சல் அத்தி காச்சல்
அனைந்து வரும் விருந்தாரைப் போலோடும் சொன்னேன்
        அப்பனே இன்றுமொரு குளிகை கேளே.

சிலேற்பனம், சுழியன், எச்சி முதலானதுக்கு குழி மீண்டான்
        மாத்திரை,

சீர்கொண்ட சிலேற்பனம் சுழியனொடு எச்சிவகை
தீராத கபங்கள் முதல் தீரவே குழி மீண்டான் குளிகை கேளே.
சிறந்த தாளகத்தை நீயும் பார்கொண்ட கட்டியதும்பலமொன்று
நீறுறு பகர்சிறுகலசமதில் வை பாங்காக சாரணைச்சாறு முங்கவிடு
பகர்சிறு அடுப்பில் வைத்து நேராக வட்டிட்டடைத்ததிலே
மூடியெரி நேசமாயுருகி வரவே கை கொண்டு அமர்த்திப்பிடித்திடு
சலியாமல், மலையாமல் பார் வாரத வற்றியே, பார்க்கையில்நீருகும்
வழித்தெடு, அந்த வகையில் வசம்புடனே வால் மிளகு வசனித்த

திரிகடுகு வனம்பெறும் ஏலமுட்னே, உடனே எடு நஞ்சறுத்தாசடைய்
வேர் சமம் உழகுப்பை மேனி வேரும், உற்ற நல் குழி மீண்டான்
சாற்றில் அரைத்தெடு மருந்தையெல்லாம் திடத்துடனே பொடித்து
திடமான முன் வார்த்த் பற்பம் கூட்டி திரட்டியுரை கொங்கை
கறை பாலதில் விட்டரைத்துக் குன்றிமணி போல் திரட்டே
திரட்டிடத் தீரும் நோய் கேள் மடமடென விலாவிலெச்சி குழி
கபம் சிலேற்பனம் மரமர குரு வெச்சி நடுவெச்சி முதல் மயங்
கியே ஓடிவிடும் .யூகி முனி முறையே.

சிறிய கேசரி நெய்.

கரப்பனென்ற வகையெல்லாம் கத்றியோட
கழுதைப்பால் நெய்யொன்று கருதிக் கேது
நீரப்பா நங்கை சிவந்தூள்ளி குப்பி
நீர் கழுதை மலநீர் பொன்நெரிஞ்சியோடு
உரப்பான துளசி தெற்றி அறுகன் வேரும்
உற்பனம்ாம் கழுதை பால் வகைக்குழக்கு
பார்ப்பான .கருஞ்சுரை வேரும் சீனப்பரிட்டையோடு
பகர்ந்த குக்கில் இரு சீரம்தானே.

தாவிந்த சற்கவகை அரைத்துச் சேர்த்து
சாதகமாய் மெழுகு பதம் தன்னில் வாங்கி
[illegible] ஊனமென்ற சிறு செய்க்கு அருந்தும்போது
உடலே விட்டு கரப்பனெல்லாம் கடலில் புக்கும்
மானென்ற பிள்ளைதாய் பத்தியமேகாத்து
மறுபத்தியம் தீர்ந்த தன்பின் முருகச் சொல்லு
கோனென்ற குறுமுனிக்கு குழந்தைவேல் சொன்ன
குணமான உபதேசம் பிசகிடாதே.

பெரிய கேசரி நெய்.

கரிமுகனடியை வாழ்த்தி கருவினில் பிறந்த செய்க்கு
மருவிய கரப்பலுலே மண்ணினில் மடிந்திடாமல்
அருளிய குமாரர்க்கீச்ன் அருள் செய்த கிருதம் தன்ன
தெரியவே புவியின் மீதே செப்புவேன் தி மருந்து தானே.

தாளுன கருங்கழுதைப்பால் நாழி தீகரையிலேல்மொசுமொசுக்கைதுளசி
தெற்றி
ஊளுன செம்பருத்தி சங்கன் குப்பி உழகுச்சி இலையுடனே மேனி
வேம்பு

தேனை படர்பருத்தி சென்னெருஞ்சி
சிறிய நங்கை பூவரசன் பட்டைதானும்
வானை கழுதை மலநீர் சிவந்தருள்ளி
வகை வகைக்குச் சாறரிபால் நாழி சேரே.

சேரே நீ பசுவின் நெய் ஈருழக்கு
சிற்றே ரன்டத்தெண்ணெயது சமனாய்க் கூட்டி
பாரே நீ சீனப்பா பலந்தானென்று
பாங்கான வயம்பு கார்கோல் கிராம்பு
வேரான வேம்பாடம் சாதிலிங்கம்
வென் கொட்டம் கருஞ்சீரம் ஏலம் சாதி
பாரே நீ திரிகடுகு கஸ்தூரி மஞ்சள்
பெலத்த குக்கில் தருசு மிவைகள் தாக்கே

தாக்கிடுவாய் கெந்தகமும் மருந்தொன்றுக்கு
தக்க நிறை கழஞ்சு முக்கால் சரியாய் கூட்டி
நீக்கியே முன்பாவுடனே மருந்தையெல்லாம்
நிசமான பசுவின் பால் தன்னாலாட்டி
பாக்கியமாய் முன் சாற்றில் கலந்து கொண்டு
பாண்டமதில் நெய்யுடனே விளாவி கிண்டி
நீக்கிடுவாய் கமலாக்கினியிட்டெரித்து
விமலனுக்கும் வடுவனுக்கும் பூசை செய்து

செய்துடனே மெழுகு பதம் கண்டிறக்கி
சிறுக வடிபாத்திரத்தில் மருந்தைக் கேரு
மெய்ய புழுகு ரோசனையும் கல்மதமும்
மருந்தான
மருந்தெனி கஸ்தூரி கற்பூரம் பச்சை
கைநிறையாய் வகைக்கு கால் கழஞ்சங்கிட்டு
கலசத்தில் நெய் வடித்துக் கறண்டிவீதம்
உய்யும் மடவாரீன்ற குழந்தைக்கிய
உலகத்தில் காணாத கரப்பன்தானே.

தானை செங்கரப்பன் செக்காமாரி
சருவாங்கக் கரப்பனொடு வாத பித்தம்
மானை சிலேற்பனமும் மண்டை நீர் கர்ணன்
மகத்தான கொத்து தோட்டையும் சொள்ளி

தேஜனை சொறி கரப்பன் படர் கரப்பன்
செங்கிரந்தி கருங்கிரந்தி செவ்வார் புற்று
ஊஜனை உள் கரப்பன் பிறகரப்பன்
உதிர சுர கரப்பனெடு பறக்கும் பாரே.

பறக்குமென்றேன் ருத்திர சன்னி பயித்திய சன்னி
பறங்கியுடன் வெட்டை வகை எல்லாந் தீரும்
கறக்கமுறும் மைந்தருடன் தெளிந்து நல்ல
கணை கரப்பன் சஜுரவுனின் கரப்பனேடு
நீர்க்கமுடன் மேகத்தின் கரப்பனெல்லாம்
நீங்கிவிடும் கரப்பன் வகை 55-மே.

அதிமூத்திரம் தாகம் மேகம் இவைகளுக்கு கஷாயம்

கருதரிய மேகபித்த வேர்வை தாகமும்
கசியும் நீரழிவு முதலாய
கனமான நோயெல்லாம் கண்டிற்ற கன்றிட
கை கண்டதோர் கஷாயம்
பெருமை பெறும் பொன் மூறண்டி
இனிய சிறு சுண்டையும், பேசரிய
மரமஞ்சளும், பாடகத்தாளிதேற்றான் கடுக்காய்தோடிலந்தைக்குரு
வருமாவினண்டிப்பருப்பாடை முத்தமும் வளர் கருங்காலி வயிரம்,
வகையே வறட்டுப் பாக்கிஞ்சி கறி மஞ்சளும் வங்கமும் இங்கு முதலாய்
சுருதி முறை தவறாது நிறையோர் கழஞ்செனு, தோய் மேரண்டுபடியே
சுத்தமாய் பாண்ட மனல் ஏற்றியனல் மூட்டியே, சேர்குரு பதத்தை
நாடே,

நாடவே படியொன்றதாக்கி இருபங்கு வைத்தொரு பங்கு
உழக்கதாக்கி நலமான தேனில் கலந்து முறையாகவே நவிலுயிரு
வேளையுண்ண, தேடவே பத்தியம் புளியிளிப்பது தள்ளு, தேக
மேலிட்டதாகம், சீறியது பொங்கிடில் படிபாகமே, கூறவே
போகின்ற நோயேது வறட்சையும், கொடிய நஷ்டப்பிர
மேகமும், குலையாத காறவும் நிலையாகுமென்று முன் கொள்கை
யறுன்ர்ந்த மேலோர், பாடவே பன்னிரண்டாயிரக்கோர்வை யிது,
பண்டிதர்க்கருள் பெருகவே, பண்பு பெறும் மெஞ்ஞான தேசிகன்
பொதிகையிலமர்ந்திடும் பண்பு பெறு மகஸ்தீசனே.

வங்கம் - இலவங்கம்

இங்கு - பெருங்காயம்.

சித்த சீவாமிர்தம்.

அமுக்கூரம் முத்தல் 2, மதுரம் முத்தல் 2, பச்சை வல்லாரை இலை முத்தல் 4, இவை மூன்றையும் 32 படி தண்ணீர் விட்டு 4 படியாய் வற்றவைத்துக் கொள்க. சதாவேலிக்கிழங்கு 35 முத்தல், இதை இடித்து சாறெடுத்து வைத்துக் கொள்ளவும். பின் 10 முத்தல் கற்கண்டு சேர்த்து காய்ச்சி தேன் பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு ½ முதல் 1 அவுன்ஸ் வீதம் சாப்பிட நரம்பு தளர்ச்சி, இருமல், ஈளை, தொண்டை கரகரப்பு, நித்திரையின்மை, இருதய பலவீனம் ஆகியவை நீங்குவதன்றியும் சுவாசப் பைகளையும் இருதய ஓட்டத்தையும் கிரமப்படுத்தும். மேலும் இதை பாலருக்கு ஒரு தேக்கரண்டி வீதம் கக்கல ரோகத்தில் கொடுத்து வரலாம். கக்குவான் இருமலுக்கும் கொடுக்கலாம்.

கெந்தக ரசாயனம்.

கெந்தகம் 1 பங்கு, அமுக்கூரம் கொடுவேலி, வேர், சீனப் பாவு, வசுவாசி சிறு நாகப்பூ, சடமாஞ்சி, சாதிக்காய் கிராம்பு கற்பூரம் இவ்வகை 1 பங்கு சுத்தி செய்ய வேண்டியவற்றை சுத்தி செய்து கெந்தகம் கற்பூரம் நீங்கலாக மற்ற சரக்குகளை சூரணம் செய்து பின் கெந்தகத்தை அரைத்து சூரணம் செய்து ரண்டையும் நன்றாகக் கலந்து பின் கற்பூரத்தை கொஞ்ச சூரணத்தோடு கல்வத்திலிட்டரைத்து எல்லா சூரணத்தோடும் கலந்து வைக்கவும். டோஸ்-ரு 10 - 20 . அநுபானம்: நெய், தேன், சர்க்கரை. சர்மரோகங்கள் மேகரோகங்கள், பல வகை குட்டம், மேகப்புண், படை மேக கிரந்தி, ஆரம்ப புற்று ரோகங்கள் கொறுக்கு ரோகம் பீச ரோகங்கள், யோனி விரணம், கண்டமாலை, மேக வாத ரோகங்கள், வாதப் பிடிப்பு, கை கால் உளைவு, இவை போக்கி தேக பலத்தையும் வனப்பையும் ஒளியையும் கொடுக்கும்.

சித்தாதி எண்ணெய்.

சீர் சிறந்த உடல்தனிலே கவிச ரோகம்
சிரசுகளிலே குடியிருந்த மற்ற ரோகம்
பார்தனிலே விழுந்தெழுந்த சூலை ரோகம்
பம்பரம் போலாடுகின்ற நீராம்பல் கட்டி
நீரிழிந்த கற்கூழ் நீர்மலத்தின் கட்டும்
நெறியான செரியொடு நணங்கள் தானும்

பேர் பொருந்தும் பெரும்பாடு நாவடைப்பு
　　பின்னுமோ சூலையொடு பவுந்திரந்தானே.

தானென்ற தலைபிடிகள் வாயில் புண்ணு
　　தழும்புகின்ற கண்ணெரிவு ஊறுவாயுவும்
ஊனென்ற உயிரெழுந்து குடிபோகந்தான்
　　உத்தமனே என்னையொன்றுரைக்கக் கேரு
வேனென்ற காயுமொடு உள்ளி வாளம்
　　மைந்தனே வெங்காரம் காட்டெருமைப்பாலும்
கானென்ற கடுக்காயும் இந்துப்பாகும்
　　கருத்த தொரு சீரகமும் சுக்குஞ் சேரே.

சேரே நீ திச்சுக்கு ஓர் கழஞ்சு
　　சேகரமாய் வாளமொடு பலமொன்றுகும்
காரே நீ உள்ளிச்சாறு கலக்காய் வாங்கு
　　கடுக்காயும் அப்படியே வாங்கு வாங்கு
சேரே நீ சிற்றே ரண்டெண்ணெய் சேராகும்
　　சிறப்பான தேங்காய் பால் சேரெட்டாகும்
வாரே நீ வேலிப்பருத்திச்சாறும்
　　வகையாக சேரெட்டு வாங்கு வாங்கே
வாங்கியே சரக்கையெல்லாம் மைபோலாட்டி.

எஸ்.வி.　　　　*******************